பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 01 சனிக்கிழமை 15.06.2024 கதிர் 220

## இது ரகசியம் அல்ல!

யுக்திய நடவடிக்கையால் எதிர்பார்க்கப்பட்ட வெற்றி கிடைத்ததோ இல்லையோ போதைப் பொருள் கடத்தல் மையமாக இலங்கையின் வகிபாகத்திற்கு அதனால் எந்தப் பாதிப்பும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. எப்போதும் போல வடக்கில் அவ்வப்போது கஞ்சா பிடிபடுகின்றது. இந்தியாவில் இருந்து கேரளக் கஞ்சா மட்டுமல்ல இப்போதெல்லாம் இஞ்சி, மஞ்சள் என்பன உட்படப் பல தரப்பட்ட பொருட்களும் கடத்தி வரப்படுகின்றன. அவற்றில் சில அவ்வப்போது பிடிபட்டாலும் பெரும்பாலானவை கடத்தி உள்ளே கொண்டு வரப்பட்டுள்ளன. யுக்திய நடவடிக்கையால் அதனைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

நாளாந்தம் யுக்திய நடவடிக்கையின் கீழ் பலர் கைது செய்யப்பட்டாலும் போதைப் பொருள் கடத்தல் தொடர்பான பெரும் புள்ளிகள் எவரும் கைது செய்யப்படவில்லை. விசாரணை வளையத்திற்குள்கூட அவர்கள் ☞2

# ஒக்டோபர் 5 அடுத்த ஜனாதிபதி தேர்தல்

## அமைச்சர் ஹரீன் ஆருடம்

ஒக்டோபர் 5 ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்று அமைச்சர்ஹரீன்பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்றையதினம் ஊடகங்களுக்குகருத்துவெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் மீண்டும் ☞2

## வீஸா நடைமுறைகளை கடுமையாக்குகிறது ஆஸி.

ஆஸ்திரேலியா அரசு ஜூலை 1 முதல் வீஸா விதிகளை கடுமையாக்க முடிவுசெய்துள்ளது. அதன்படி சுற்றுலா வீஸாவில் அவுஸ்திரேலியாவுக்கு சென்று தங்கியிருந்து மாணவர் விசா பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு இழக்கப்படுமென்று சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

போர், மோதல் மற்றும் வறுமை காரணமாகஆயிரக்கணக்கானமக்கள் நாட்டை விட்டு வெளியேறி செல்வந்த நாடுகளில் தஞ்சமடைகின்றனர்.

அதேநேரத்தில் ஏராளமான மக்கள் வெற்றிகரமான எதிர்கால நம்பிக்கையுடன் அந்த நாடுகளில் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளை நாடுகின்றனர். எனினும் ஆண்டு தோறும் பல குடியேற்றவாசிகள் சட்ட ரீதியாகவும், சட்டவிரோதமாகவும் ஆஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்கின்றனர். உயர் கல்விக்காக செல்பவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த தற்போது பல்வேறு ☞2

## தமிழ் பொது வேட்பாளராக போட்டியிட அனந்தி தயார்

### நேற்று அவரே தானாக அறிவிப்பு

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளராகபோட்டிடுவதற்கு தயார் என்று ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகத்தின் செயலாளர் நாயகமும், வடமாகாண சபையின் முன்னாள் அமைச்சருமான அனந்திசசிதரன்அறிவித்துள்ளார்.

வடமராட்சி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்த அறிவிப்பை விடுத்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆண்டாண்டு காலமாக ஈழத்தமிழர் மீது இழைக்கப்பட்டு வருகின்ற சர்வதேசக் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலுக்கு இலங்கை அரசை உள்ளாக்க சர்வதேச அழுத்தம் ஒன்றே ஈழத்தமிழர் தேசத்திடம் எஞ்சியுள்ள வழிவகையாக உள்ளது. இதுவே மூலோபாய முன்னெடுப்புக்கான பாதை. ☞2

## பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை இன்னும் மீளவில்லை

### சர்வதேச நாணய நிதிய பிரதிநிதி தெரிவிப்பு

இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து இன்னும் முழுமையாக மீட்சிப்பெறவில்லை என்று சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதுக்குழுவின் பிரதானி பீற்றர் ப்ரூவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு மூன்றாம் தவணைநிதியைவழங்கும் முடிவு தொடர்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்நிலை ஊடாகசெய்தியாளர்களுடன் பேசியபோதுஅவர்இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் இலங்கை முன்னேற்றகரமான நிலையில் இருப்பதை அவதானிக்க முடிகிறது. ஏற்றுக் கொள்ளப்பட்ட செயற்திட்ட நிபந்தனைகள் தாமதமான நிலையிலும் நிறைவேற்றப் பட்டுள்ளமை இதன் சிறப்பு.

தற்போதைய சீர்த்திருத்தங்களினால் இலங்கைப் பொருளாதாரத்தின் ஆரம்பக் கட்டமைப்பு சீரடைந்துள்ளது. நிதி ஒத்துழைப்பு திட்டத்தின் கீழ் அதிகாரிகளின் வலுவான செயல்பாட்டை நிர்வாக இயக்குநர்கள் பாராட்டினர்.

பொருளாதாரம் மீட்சி பெற்றுள்ளது. பணவீக்கம் குறைவாகவே உள்ளது. வருவாய் சேகரிப்பு மேம்பட்டுள்ளது. நாட்டின் வெளிநாட்டு கையிருப்பு உறுதிப்பட்டுள்ளது.

அதேநேரம் இடம் பெறவுள்ள தேர்தல்கள் ஆகியவற்றால் பாதிப்பு மற்றும் நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது. பொருளாதார உறுதிப்பாடு மற்றும் கடன் நிலைத்தன்மையை ☞9

## இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு முயற்சி

### சில நாடுகள் ஒன்றிணைந்து மேற்கொள்வதாக பதறுகிறார் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர

இந்நாட்டில் காணப்பட்ட பிரிவினைவாத யுத்தத்தில் போர் முறையில் போராடிய வீரர்கள் யுத்தக் குற்றம் இழைத்ததாகக் குற்றஞ்சாட்டி அவர்களுக்கு எதிராகவும், அரசியல் தலைவர்களுக்கு எதிராகவும் யுத்தக் குற்றச் சாட்சியங்களைச் ☞2

## இந்திய அமைச்சர் ஜெய்சங்கர் இம்மாதம் இலங்கை வருவார்

### அமைச்சர் அலி சப்ரி தகவல்

இந்திய அயலுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் இந்த மாதம் இலங்கைவருவார்என்று எதிர்பார்க்கப்படுவதாக அயலுறுவுத்துறை அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அமைச்சர் அலி சப்ரி இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அண்மையில் இந்தியப்பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு நிகழ்வில் கலந்துகொண்டார். அதன்படி இந்திய அயலுறவுத் துறை அமைச்சர் இம்மாதம் இலங்கை ☞8

## புதிய ஆசிரியர்களை இணைக்க அரசிடம் போதிய பணம் இல்லை

ஆசிரியர் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களை ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள் வதற்கு கல்வி அமைச்சின் அனுமதி கோரப்பட்டுள்ளதாக வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் தெரிவித்தார்.

எனினும், ஆசிரியர் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட வடமத்திய மாகாண பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள் வதற்கு நிதி இல்லை என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அவர்களை ☞9

## ஆர்ஜென்டீனாவின் பாதையில் இலங்கையும் நடைபோடுகிறது

### உதய கம்பன்பில தெரிவிப்பு

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளமுடியாதநிலையை நோக்கி ஆர்ஜென்டீனா நாட்டின் பாதையில் இலங்கையும் நடந்து வருகின்றது என்று பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதயகம்மன்பில ☞2

## மனிதர்களுடனான மோதல்களால் 5 மாதங்களில் 150 யானைகள் சாவு

வனவிலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் இடையே அதிகரித்து வரும் முரண்பாடுகளினால் இந்த வருடத்தின் கடந்த ஐந்து மாதங்களில் 150 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக வனஉயிரிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி 28 யானைகளும், மின்சாரம் தாக்கி 21 ☞2

## மயக்க மருந்து பற்றாக்குறை அறுவைச் சிகிச்சை நிறுத்தம்

### கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இந்த நிலை

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மயக்க மருந்து பற்றாக் குறையினால் அறுவைச் சிகிச்சைகளை நிறுத்த நேரிட்டதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் சுகாதார அமைச்சின் மருந்து விநியோக பிரிவின் பிரதி பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஜி.விஜேசூரியவிடம்

## தபால் ஊழியர் போராட்டத்தால் 15 லட்சம் கடிதங்கள் தேக்கம்

தபால் சேவை ஊழியர்களின் பணிப் புறக்கணிப்பால் 15 இலட்சத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் தேங்கியுள்ளதாக தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன.

இந்தக்கடிதங்களை எதிர்வரும் 2 நாட்களுக்குள் விநியோகிக்க ☞2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

இல்லை என்கின்றன தகவலறிந்த பொலிஸ் வட்டாரங்கள். இதன் விளைவாகவே போதைப் பொருள் கடத்தல் வியாபாரம் இலங்கையில் தொடர்ந்தும் தீவிரமாக இடம்பெற்று வருகின்றது.

இந்தியாவில் இருந்து கஞ்சா பெருமளவில் வடக்கு கடல் ஊடாகக் கடத்தப்படுகின்றது என்றால், விட்டேனா பார் என்கிற வகையில் தெற்குக் கடல் ஊடாக பாகிஸ்தானில் இருந்து ஹெரோயின் போதைப் பொருள் கடத்தல் தொடர்ந்தும் தீவிரமாக இடம்பெற்று வருகின்றது. இலங்கை போதைப் பொருள் நுகர்வுக்கான இடமாக மட்டும் இல்லாமல் உலகின் கிழக்குப் பகுதியில் இருந்து மேற்குக்கு போதைப் பொருள்களைக் கைமாற்றும் மத்தியநிலையமாகவும் செயற்படுவதால் மிகப் பெருந்தொகையில் இலங்கைக்குள் பாகிஸ்தானியர்களால் போதைப் பொருள் கடத்தி வரப்படுகின்றது.

நேற்றும்கூட தெற்குக் கடலில் பயணித்துக்கொண்டிருந்த ஒரு பலநாள் மீன்பிடிப் படகைக் கைப்பற்றிய இலங்கைக் கடற்படையினர் அதிலிருந்து 150 கிலோ ஹெரோயினைக் கைப்பற்றியுள்ளனர். காலிக்குத் தெற்கே 400 கடல் மைல்கள் தொலைவில் இந்தப் படகு கைப்பற்றப்பட்டுள்ளது.

நாட்டுக்குள் கஞ்சா மற்றும் ஹெரோயின் வருவரும் போவதும் தங்குதடங்கல் இன்றி தொடர்ந்து வருகின்றன என்கின்றன இது தொடர்பில் பணியாற்றிவரும் அரச சார்பற்ற நிறுவனங்கள். ஆனால், போதைப் பொருள் பயன்படுத்துபவர்களை அள்ளுகொள்ளையாகக் கைது செய்து சிறையில் அடைத்து போதைப் பொருள் கடத்தலை ஒழிக்கப்போவதாகப் பொலிஸாரும் அதற்கான அமைச்சரும் 'படம்' காட்டி வருகின்றார்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஒக்டோபர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரிசையுகம் தேவையா இல்லையா என்பதை மக்களே முடிவெடுக்க வேண்டும். மக்களின் தீர்மானம்தான் இங்கு முக்கியமானது.

எவ்வாறாயினும் ஒக்டோபர் 5 ஜனாதிபதி தேர்தல் நடைபெறுகின்றது. அன்றையதினம் ரணில் விக்கிரமசிங்க எவ்வாறு வெற்றி பெறுவார் என்பதை நாங்கள் நேரடியாக நிகழ்த்திக் காண்பிப்போம் என்றார்.

## இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேகரிக்கும் வெளியகப் பொறிமுறையொன்று இரண்டு வருடங்களாக சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் 46ஃ1 பிரேரணைக்கு அமைய அமைக்கப்பட்டுள்ளதாகத் தேசிய பாதுகாப்புப் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இந்நாட்டு இராணுவத் தலைவர்களுக்கு எதிராகக் கணிசமானளவு சாட்சிகள் அவர்களிடம் இருப்பதாக குறித்த பொறிமுறையின் ஊடாக அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்புப் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அண்மையில் அவரது தலைமையில் கூடியபோதே நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர இதனைத் தெரிவித்தார்.

இவ்வாறு போர்க் குற்றம் இழைத்ததாக சாட்சி கிடைத்திருக்கும் இலங்கைப் படைத் தளபதிகளுக்கு எதிராக நீதிமன்ற சட்ட அதிகாரத்தின் கீழ் சர்வதேச நீதிமன்றத்தில் வழங்குத் தொடர்வதற்கு ஏற்கனவே சில நாடுகள் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுத்திருப்பதாக இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த வெளியகப் பொறிமுறை வெளிவிவகார அமைச்சினால் நிராகரிக்கப்பட்டுள்ள போதும், இந்நாட்டு இராணுவத் தளபதிகளுக்கு எதிராகத் தொடர்ந்தும் சாட்சியங்கள் சேகரிக்கப்பட்டு வருவதால் இலங்கையின் இராணுவ அதிகாரிகள் எந்த நாட்டிலும் கைது செய்யப்படலாம் என்பதே இங்குள்ள ஆபத்தான நிலமையாகும் என இங்கு தெரிவிக்கப்பட்டது.

இந்நாட்டில் இடம்பெற்ற போர் புலிகள் அமைப்புக்கு எதிரானதன்றி தமிழ் இனத்துக்கு எதிரான போர் என அடையாளப்படுத்தப்படுவதற்கான வாய்ப்பு இந்த வெளியகப் பொறிமுறைக்குக் காணப்படுவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்த நடைமுறையானது இராணுவத்தினரது சுயமரியாதைக்கும், தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமைந்திருப்பதாகவும், இவர்கள் மீது ஏனைய நாடுகள் போர்க் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதையும், சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதையும் தடுப்பதற்கும் வெளிவிவகார அமைச்சு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கைகளுக்கு கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியிருப்பதாகவும், இது தொடர்பில் பக்கச்சார்பற்ற முறையில் செயற்படும் நாடுகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த தமது அமைச்சு நடவடிக்கை எத்திருப்பதாவும் இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

வலுவான தேசிய பொறிமுறையொன்று காணப்பட்டால் மட்டுமே வெளியகப் பொறிமுறையினால் சேகரிக்கப்படும் சாட்சிகளைத் தோற்கடிக்க முடியும் என்றும், இது தொடர்பில் எல்.எல்.ஆர்.சி. அறிக்கை மற்றும் பரணகம அறிக்கையில் உள்ள விடயங்களை உள்ளடக்கியதாக தேசிய தகவல் கோப்புத் தயாரிக்கப்பட வேண்டும் என்று குழுவின் அமர்வுக்கு அழைக்கப்பட்டிருந்த சட்டத்தரணி தர்ஷன வீரசேகர இது பற்றிக் தெரிவித்தார்.

உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு இந்நாட்டுக்கு எதிராகச் செயற்படும் வெளியகப் பொறிமுறைக்கு மேலும் ஒத்துழைப்பு வழங்கும் வகையில் அமையும் என்றும் துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் சரத் வீரசேக தெரிவித்தார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலமும் அன்றையதினம் குழுவில் கலந்துரையாடப்பட்டதுடன், உயர் நீதிமன்றத்தினால் சுட்டிக்காட்டப்பட்டமைக்கு அமைய சட்டமா அதிபர் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட அனைத்துத் திருத்தங்களுக்கும் குழுவில் அனுமதி வழங்கப்பட்டது.

மேலும் இந்நாட்டுக்குப் பொருந்தும் வகையில் பயங்கரவாதம் என்ற பதம் சரியாக அர்த்தப்படுத்தப்படவில்லை என்றும் பல பயிற்சிகளின் விளைவாக பயங்கரவாதி உருவாவதால், இந்தப் பயிற்சிகள் மற்றும் சிந்தனை மாற்றங்கள் ஆரம்பிக்கும்போது போது பயங்கரவாதியைப் பிடிப்பதற்கு எந்த முறையும் இல்லை என்பது தேசிய பாதுகாப்புப் பற்றியும் துறைசார் மேற்பார்வைக் குழுவில் கலந்துரையாடப்பட்டது.

## மனிதர்களுடனான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யானைகளும், ஹக்க பட்டாசுகளினால் 13 யானைகளும், நஞ்சூட்டப்பட்டதால் 2 யானைகளும், ரயில் விபத்துகளால் 3 யானைகளும், வீதி விபத்தினால் ஒரு யானையும், நீரில் அடித்துச் செல்லப்பட்ட சம்பவங்களால் 7 யானைகளும், ஏனைய விபத்துகளால் 4 யானைகளும் உயிரிழந்துள்ளதாக வனஉயிரிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

யானைகளில் பெரும்பாலானவை இள வயதிலேயே உயிரிழந்துள்ளன.

இதேவேளை அதிகரித்துவரும் யானை 'மனிதன் மோதல்களால் 45 பேர் உயிரிழந்துள்ளனர். 2023ஆம் ஆண்டு யானை ' மனித மோதல் காரணமாக 488 யானைகள் உயிரிழந்துள்ளன. அது-போன்று 184 பேர் யானைகளால் உயிரிழந்துள்ளனர் எனவும் வனஉயிரிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

## வீஸா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன்படி ஆஸ்திரேலிய அரசு கடந்த ஆண்டு தனது வீஸா விதிகளை கடுமையாக்கும் திட்டங்களை அறிவித்தது. எதிர்வரும் 2025ஆம் ஆண்டுக்குள் நாட்டுக்கு வரும் புலம்பெயர்ந்தோரின் எண்ணிக்கையை 50 சதவீதம் குறைக்கவும் ஆஸ்திரேலியா இலக்கு நிர்ணயித்துள்ளது.

இதேவேளை ஆஸ்திரேலியாவில் 2023ஆம் ஆண்டு ஜூலை 1 முதல் இந்த ஆண்டு ஜூன் 1 வரை சுற்றுலா வீஸாவில் வந்து மாணவர் விசாவுக்கு விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை 36 ஆயிரத்தை கடந்துள்ளது.

தற்காலிக பட்டதாரி வீஸா வைத்திருப்பவர்கள் தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக மாணவர் விசாக்களுக்கு விண்ணப்பிப்பது 2022/23 இல் 30 சதவீதம் அதிகரித்துள்ளது. இது நாட்டின் மாணவர் வீஸா நடைமுறையை சீர்குலைப்பதாகவும், உயர் கல்வி பெறும் உண்மையான நோக்கத்துடன் நாட்டுக்குள் வரும் மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்காலிக பட்டதாரி வீஸாவின் கீழ் பட்டப்படிப்புக்கு பின்னர் பணி புரியும் நேரத்தைக் குறைக்கவும், விண்ணப்பிப்பதற்கான வயது வரம்பை 50 முதல் 30 ஆக குறைக்கவும், ஆங்கிலமொழித் திறனை உயர்த்தவும் ஆஸ்திரேலிய அரசு தீர்மானித்திருந்திருந்தது.

## தபால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை எடுப்பதாக ஒன்றிணைந்த தபால் ஊழியர் தொழிற்சங்க கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் சிந்தக்க பண்டார தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக செயலாளருடன் நேற்றுக் கலந்துரையாடியபோது எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாக அவர் கூறினார்.

எவ்வாறாயினும் ஊழியர்களை சேவையில் இணைத்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளுக்கான தீர்வை வழங்க அரசுக்கு ஜூன் 24 வரை கால அவகாசம் வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜூன் 24 ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுகள் வழங்கப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கையை மீண்டும் தொடங்கவுள்ளதாகவும் ஒன்றிணைந்த தபால் ஊழியர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் சிந்தக்க பண்டார கூறியுள்ளார்.

தபால் ஊழியர்களின் 24 மணித்தியால தொழிற்சங்க நடவடிக்கை நேற்று நள்ளிரவுடன் நிறைவுக்கு வந்தது.

## தமிழ் பொது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈழத்தமிழருக்கான சர்வதேச அரசியலை முன்னெடுப்பதில் கட்சிகளுக்கிடையே ஒற்றுமையற்ற சூழல் உருவாக்கியுள்ளது. ஆதலால், கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட நிலையில் ஈழத்தமிழருக்கான ஒரு பொதுப் பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்து அவரை ஈழத் தமிழர்களின் நிழல் ஜனாதிபதியாக சர்வதேசம் கணிப்பிடும் நிலையைத் தோற்றுவிப்பதே காலத்தின் தேவையாக உள்ளது.

இருப்பினும் இதைச் சரிவரச் செய்யவேண்டுமானால், ஆக்கிரமித்துள்ள தேசத்தின் ஜனாதிபதி வேட்பாளர் எவரையும்விட அதிக வாக்குகளைப் பெறும் வகையில் ஒருவரை ஈழத்தமிழர் தேசம் தகுந்த தேர்தல் அறிக்கையோடு நிறுத்தவேண்டும். அவர் அதிக வாக்குகளைப்பெறவேண்டும். அவர் எமது நிழல் ஜனாதிபதியாக இயங்கவேண்டும்.

பொதுவேட்பாளரின் முழுமுயற்சியும் இன அழிப்புக்கான சர்வதேச நீதி நோக்கியதாக அமையவேண்டும். இதற்குரிய அஞ்சாநெஞ்சத் துணிவும், தகைமையும் வன்மையும் பொருந்திய ஒருவர் ஈழத் தமிழர் நிழல் ஜனாதிபதிக்குரிய பொது வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட வேண்டும்.

இதற்கு அனைத்துக் கட்சிகளையும் ஒத்துழைக்க நிர்ப்பந்திப்பது ஈழத்தமிழர் ஒவ்வொருவரதும் கடமையாகும். அதுமட்டுமல்ல, அரச பொறுப்புக் கூறல், சர்வதேச நீதி போன்றவற்றின் தார்ப்பரியங்களைப் புரியாத, அவற்றை எடுத்தாள இயலாத ஒருவர், அதுவும் இவ் விடயத்தில் முன் அனுபவம் எதுவும் இல்லாத ஒருவர் பொதுவேட்பாளராகி இந்தக் கைங்கரியத்தைச் சாதிக்கமுடியாது.

ஆகவே, 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இன அழிப்புப் போரில் பாதிக்கப்பட்ட மக்களின் நேரடிக் குரலாக சர்வதேச நீதி கோரிய பயணத்தில் காத்திரமாகப் பங்கேற்ற, பயணித்த அனுபவமுள்ளவளாகிய நான் அந்தக் களத்தில் பயிற்சி பெற்றுள்ள அனுபவத்தோடு துணிந்து களமிறங்கத் தயாராக உள்ளேன் என்பதை இது குறித்த அக்கறையுள்ள அனைவரின் கவனத்துக்கும் இத்தருணத்தில் கொண்டுவருவது எனது கடமையாகிறது.

அதுவும், எந்தக் கட்சியினதும் அல்லது கூட்டினதும் பிரதிநிதியாக அன்றி, ஈழத்தமிழருக்கான பொதுப் பிரதிநிதியாக என்னை மாற்றிக்கொள்ளவும், இதற்கான பொருத்தமான கொள்கை வகுப்பு மேற்கொள்ளப்படும்போது அதற்குக் கட்டுப்பட்டு இயங்கவும் தயாரக உள்ளேன் என்பதையும் பரந்துபட்ட சமூகத்துக்குத் தெரிவிப்பதும் எனது கடமையாகிறது.

அதுமட்டுமன்றி, இவ்வாறான தன்மைகளோடு என்னைவிடவும் ஆற்றலுள்ள வேறு எவரேனும் நம்பகமாக நிறுவப்படக்கூடிய வகையில் முன்வைக்கப்பட்டால் அவ்வாறான வேட்பாளரை ஆதரிக்கவும் நான் தயாராக உள்ளேன் என்பதையும் நான் சுட்டிக்காட்டவும் விரும்புகிறேன்.

ஆகவே, இதற்கான பொருத்தமான கொள்கை வகுப்பை தற்போது உருவாக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் பொதுச்சபை மேற்கொள்ளவேண்டும். அதனால், இதைச் சரிவர மேற்கொள்ள இயலுமா என்பதை நிறுவுவதும் அதை நடைமுறையிற் சாதிப்பதும் ஒட்டுமொத்த ஈழத்தமிழர் தேசத்தின் சமூகப் பொறுப்பாகும்.

பொதுவேட்பாளர் வேண்டுமா வேண்டாமா என்று விவாதித்துக் கொண்டிருப்பதிலேயே காலத்தைச் செலவிட்டு பொறுப்பற்ற வகையில் விவாதங்களை முன்னெடுத்துக்கொண்டிருக்காமல் நடக்க வேண்டிய விடயத்தை பொறுப்புக் கூறலுடனும் வெளிப்படைத்தன்மையுடனும் இதயசுத்தியுடனும் அணுகவேண்டும்.

இலங்கை அரசின் இன அழிப்புக்கான அரச பொறுப்பைச் சர்வதேச விசாரணைக்கு உள்ளாக்குவதில் சில காத்திரமான நகர்வுகள் பல முனைகளில் இருந்தும் புலம்பெயர் ஈழத்தமிழர் தரப்புகளால் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த வகையில், காத்திரமான நகர்வுகள் முன்னேறிச்செல்லும் வகையில் எமது மூலோபாய முடிவுகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன் என்றார்.

## ஆர்ஜென்டீனாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

கோட்டேயில் உள்ள அவரது கட்சி தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களுடன் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டுக்குள் உற்பத்திகளைச் செய்யாது இறக்குமதிக்கான செலவுக்கும், ஏற்றுமதிக்கான இலாபத்துக்கும் இடையிலான தொகையை கடனாக வாங்கியுள்ளனர்.

நெருக்கடிகளைப் போக்குவதற்கான செயற்பாடாக மீண்டும் கடன் வாங்கும் செயற்பாடு அமைய முடியாதல்லவா? அதற்கு சிறந்த உதாரணமே ஆர்ஜென்டீனாவாகும். தற்போது ஆர்ஜென்டீனாவில் பெரும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

1983ஆம் ஆண்டு ஆர்ஜென்டீனா வங்குரோத்து அடைந்தது. சர்வதேச நாணய நிதியத்தின் கடனைப்பெற்று அதன் ஆலோசனைகளில் செயற்பட்டபோதும், அந்நாட்டினால் 41 ஆண்டுகளாகியும் மீண்டெழ முடியாத நிலைமையே உள்ளது.

உள்நாட்டு தேசிய உற்பத்தியினை அதிகரித்தமையால் இந்தியாவும், ரஷ்யாவும் மீண்டெழுந்துள்ளன. எமது நாட்டில் தேசிய உற்பத்திகளை அதிகரிப்பதற்கும் அதில் மக்களை ஈடுபடுத்துவதற்கும் ஆளும் தரப்பிடம் எவ்விதமான வேலைத்திட்டங்களும் இல்லை.

அவ்விதமான எத்தகைய வழிகளையும் பயன்படுத்தாது நாம் வெற்றியீட்டியுள்ளோம் என்று கூறுவதானது முட்டாள்தனமானது. நாம் ஆர்ஜென்டீனாவின் வழியில் பயணிக்கின்றோம் என்பதுதான் யதார்த்தமானதாகும் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# தேசிய அடையாள ஒன்றிணைவே முஸ்லிம்களுக்கு பாதுகாப்பானது

## வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் கருத்து





(எம் சியாஜ்)

தனித்துவ அடையாளங்களுடன் ஒதுங்கி இருப்பதை விட தேசிய அடையாளங்களுடன் ஒன்றிணைந்து வாழ்வதே இந்நாட்டின் சிறுபான்மை சமூகமான முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பானது என்று வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் வலியுறுத்தியுள்ளார்.

குருநாகல் முஸ்லிம் வர்த்தக அமைப்பின் ஏற்பாட்டில் செவ்வாய்க்கிழமை குருநாகல் ப்ளூ ஸ்கை ஹோட்டலில் நடைபெற்ற சிநேகபூர்வ கலந்துரையாடல் நிகழ்வில் உரையாற்றும்போது ஆளுநர் நஸீர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

இலங்கை முஸ்லிம்களின் தேசியத் தலைவர்களாக மதிக்கப்படும் டீ.பி.ஜாயா, சேர் ராசிக் பரீத், பதியூதீன் மஹ்மூத், எம்.எச்.எம். அஷ்ரப் போன்றவர்கள் தேசிய அரசியலுடன் இணக்கப்பாட்டுடன் செயற்பட்டதன் காரணமாகவே இன்று நாம் அனுபவிக்கும் உரிமைகளைப் பெற்றுத் தந்தார்கள். அந்த வகையில் தனித்துவ அரசியலை விட தேசிய அடையாளங்களுடனான அரசியலே எமக்குப் பாதுகாப்பானது. பலன் தரக்கூடியது.

கடந்த காலங்களில் நாங்கள் ஏராளமான அச்சுறுத்தல்களை எதிர்கொண்டோம். ஆனாலும் அவ்வாறான சந்தர்ப்பங்களிலும் குருநாகல் போன்ற இடங்களில் ஏனைய சமூகங்களுடனான நல்லுறவு காரணமாக பாதிப்புகள் குறைவாக இருந்தது. அதன் மூலம் நாங்கள் சில பாடங்களைக் கற்றுக் கொள்ள முடிந்துள்ளது.

என்னைப் பொறுத்தவரை நான் என்றைக்கும் இனரீதியான சிந்தனை, இனரீதியான செயற்பாடுகள் கிடையாது. என்னைச் சந்திக்க வரும் எந்தவொரு நபரின் இன, மத அடையாளங்களையும் நான் கவனிப்பது கிடையாது. என்னை நாடிவரும் மக்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதை மட்டுமே என் கடமையாகக் கருதுகின்றேன்.

ஆகவே தேவையுள்ள எந்தவொரு நபரும் என்னை எந்தநேரத்திலும் தேடி வரலாம். அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதை என் சந்தோசமாக நான் கருதுகின்றேன்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை சுய திருப்தியை விட இறை திருப்தியை முன்னிட்டு செயற்பட வேண்டும். எண்ணங்கள் தூய்மையாக அமையும் போது எமது செயற்பாடுகள் அனைத்தும் இறை திருப்தியை முன்னிட்டதாக அமையும். நேர்மையான முறையில் மேற்கொள்ளப்படும்போது வர்த்தகமும் கூட ஒரு இறை திருப்தியைத் தரும் செயற்பாடாக அமையும். குருநாகல் மாவட்டத்தைப் பொறுத்தவரை எல்லா வளங்களும் நிரம்பிய ஒரு மாவட்டமாகும்.

அந்த வகையில் இந்த மாவட்டத்தில் சுற்றுலாத் துறை ஊடாக பல்வேறு அபிவிருத்தி முயற்சிகளை மேற்கொள்ள முடியும். சுற்றுலாத்துறை ஊடாக பல்வேறு புதிய முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்க முடியும். வடமேல் மாகாணத்தில் புதிய முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்குவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம். இன்வெஸ்டிங் வயம்ப என்றொரு திட்டத்தை அதற்காக முன்மொழிந்துள்ளோம்.

குருநாகல் நகரை ஒரு ஹெல்த் சிட்டியாக மாற்றும் எண்ணக்கரு ஒன்றும் உள்ளது. அதற்கான முயற்சிகளையும் முன்னெடுத்துள்ளோம். குளியாப்பிட்டிய நகரை ஒரு தகவல் தொழில்நுட்பப் பூங்காவாக மாற்றி அமைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கான உட்கட்டமைப்புகள் மேம்படுத்தப்படுகின்றன. இவ்வாறாக வடமேல் மாகாணத்தை பல்வேறு துறைகளிலும் அபிவிருத்தி செய்வதற்கான செயற்பாடுகளை நாங்கள் முன்னெடுத்துக்கொண்டிருக்கின்றோம்.

இவற்றின் ஊடாக உரிய பயனைப் பெற்றுக்கொள்ளவேண்டியது இப்பிரதேச மக்களின் பொறுப்பாகும். புதிய முதலீட்டுத் திட்டங்களில் உரிய பங்களிப்பைச்செய்ய வேண்டியது இங்குள்ள வர்த்தகர்களின் பொறுப்பாகும். அதிலும் தனி வர்த்தக முயற்சிகளை விட காலமாற்றத்துக்கு இசைவாக கூட்டு வர்த்தக முயற்சிகளாக மாற்றி அமைக்கும் போது அதன் வெற்றியும், பலமும் அதிகமாக இருக்கும்

அதேபோன்று குருநாகல் மாவட்ட மக்கள் தங்களுக்கான அரசியல் பிரதிநிதித்துவத்தை பெற்றுக் கொள்வதிலும் கவனம் செலுத்தவேண்டும் . அதற்கான அரசியல் வேறுபாடுகள், கட்சி வேறுபாடுகளை மறந்து ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். ஏனைய விடயங்களால் சாதிக்க முடியாத பல விடயங்களை அரசியல் பிரதிநிதித்துவம் மூலமாக சாதித்துக் கொள்ள முடியும் என்றும் ஆளுநர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் குருநாகல் மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் அஸார்தீன், வடமேல் மாகாண அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் சமந்த அபேவிக்கிரம, குருநாகல் முஸ்லிம் வர்த்தக அமைப்பின் தலைவர் எம்.வை.எம். கியாஸ் ஜே.பி., செயலாளர் எம்.எல்.எம். மிதிலாஜ், பொருளாளர் ஏ.எம். இர்பான், அமைப்பின் போசகர் ரயீஸ் மீரா, பிரபல வர்த்தகர் நவாஸ், குருநாகல் சாஹிராக் கல்லூரி அதிபர் ஏ.எம். சித்தீக், சிவில் அமைப்புகளின் ஒருங்கிணைப்பாளர் சபருல்லாஹ், பிரபல அறுவை சிகிச்சை நிபுணர் டொக்டர் ஷாபி உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# ஹஜ்ஜுப் பெருநாள் : கதையும் கவிதையும்

ஹஜ் பெருநாள் தினத்தன்று மாலை ஐந்து மணிக்கு பிறை ரீதியில் புதிய தொடராக ஆரம்பமாகும் பிறை வெளி நிகழ்ச்சியில் ஹஜ் தியாகத்தின் பேரின்பப் பெருவெளி எனும் மகுடத்தில் உரையாடலும் கவிதை வாசிப்பும் ஒளிபரப்பாகவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மூத்த கவிஞர்களான வைத்திய கலாநிதி தாஸீம் அஹமத்,மேமன் கவி, புர்கான் பீ இப்திகார், கவிஞர் ஹஸீர், கவிஞர் நபீல் ,முல்லை முஸ்ரிபா ஆகியோர் கலந்து கொண்டு ஹஜ் பெருநாள், ஹஜ் கிரியைகள், ஊர்ப்பெருநாள், பால்ய கால நினைவுகளென அனுபவங்களை மீட்டுவதுடன் கவிதைகளும் வாசிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வைப் பிறை ரீவி பொறுப்பாளர் றிஸ்வான் தயாரித்திருக்கிறார். பிறைவெளி முன்வைப்பாளர் முல்லை முஸ்ரிபா தொகுத்தளிக்கிறார். (05)

# வனப்பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வுக் கூட்டம்



(ஹஸ்பர் ஏ.எச்)

வனப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை அமைச்சுகளுக்கிடையேயான குழுவின் முடிவின் படி செயல்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வு கூட்டம் அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் புதன்கிழமை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இதன் போது மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன், பிரதேச செயலாளர்கள் மற்றும் துறைசார் அதிகாரிகள், வனப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தின் அதிகாரிகள், துறைசார் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (05)

# பல்கலைக்கழக கற்கைநெறிகளும் விண்ணப்பித்தல் குறித்த வழிகாட்டல் கருத்தரங்கு சம்மாந்துறையில்



(ஹஷான் அஹமட்)

அண்மையில் வெளியான 2023 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தர பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைவாக இலங்கையின் அரச பல்கலைக்கழக இளமானிக்கற்கைநெறிகளிற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் 2023ஃ24 கல்வியாண்டுக்கு விண்ணப்பிக்க எதிர்பார்த்துள்ள மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கொன்று சம்மாந்துறை நலனுக்கும் அபிவிருத்திக்குமான பேரவையின் பங்களிப்புடனும் சம்மாந்துறை இளமானிப்பட்டதாரிகள் அமைப்பின் ஏற்பாட்டிலும் செவ்வாய்க்கிழமை அல்-மர்ஜான் முஸ்லீம் மகளிர் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இக்கருத்தரங்கில் வளவாளர்களாக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பவியல் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எப்.எச்.ஏ.சிப்லியும் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் வர்த்தக மற்றும் முகாமைத்துவ பீட விரிவுரையாளர் எம்.பர்விஸும் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வின் அறிமுக உரையை சம்மாந்துறை இளமானிப்பட்டதாரிகள் அமைப்பின் தலைவரும் மொறட்டுவை பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவருமான எம்.எஸ்.ஹினாஸ் அஹமட் நிகழ்த்தியதுடன் மேலும் உரையில் 'இதன் தொடர்ச்சியாக எதிர் வருகின்ற நாட்களில் நிகழ் நிலை விண்ணப்பம் நிரப்பும் நிகழ்வானது அத்துறையில் நிபுணத்துவம் வாய்ந்த இளம்பட்டதாரி மாணவர்களால் இலவசமாக வழங்கி வைக்கப்படும்' எனவும் கூறியிருந்தார்.

இக் கருத்தரங்கில் 2023-2024 கல்வியாண்டிக்கான பல்கலைக்கழக கற்கை நெறிகளிற்கு விண்ணப்பிக்க எதிர்பார்த்துள்ள மாணவர்கள் கலந்து கொண்டிருந்தனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அதிகார முறைகேடுகள் நிறுத்தப்படவேண்டும்

அண்மையில் உயர்நீதிமன்றம் ஒரு முக்கிய தீர்ப்பை வழங்கியிருந்தது. ஜுலை 1, 2005 இல் ரோயல் பார்க் கொலைச் சம்பவத்தில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட ஜுட் ஷ்ரமந்த ஜயமஹாவுக்கு முன்னாள் அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன வழங்கிய மன்னிப்பு முறையற்றது என்ற தீர்ப்பை உயர் நீதிமன்றம் வழங்கியிருந்தது. ஜுன் 6 இந்தத் தீர்ப்பு வந்தது. கடந்த ஆறு மாதங்களில் இதுபோன்று முன்னாள் அரசுத் தலைவர்கள் வழங்கிய மன்னிப்பை உயர் நீதிமன்றம் இல்லாதொழித்த இரண்டாவது சம்பவம் இதுவாகும்.

முன்னாள் அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆலோசகர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவை 2011ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8 கொலை செய்த வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு முன்னாள் அரசுத் தலைவர் கோட்டாபய ராஜபக்ச வழங்கிய மன்னிப்பை இல்லாதொழித்தது நீதிமன்றம் வழங்கிய முதல் தீர்ப்பாகும்.

துமிந்த சில்வா மற்றும் ஜுட் ஷ்ரமந்த ஜயமஹா ஆகியோருக்கு வழங்கப்பட்ட தண்டனைகளை மீண்டும் உறுதிப்படுத்தி உச்ச நீதிமன்றம் வழங்கிய இரண்டு தீர்ப்புகளும் தொழில்நுட்ப அடிப்படையிலானவை – அதாவது, அவை அரசுத் தலைவருக்குள்ள பொதுமன்னிப்பு வழங்கும் அதிகாரத்தைக் கேள்விக்குபடுத்தவில்லை. விசேட பொது மன்னிப்பை வழங்குவதில் ஜனாதிபதி முறையான சட்ட நடைமுறைகளை பின்பற்றத் தவறியிருந்தார் என்பதே உயர் நீதிமன்றத்தின் குற்றச்சாட்டு.

இதற்கிடையே, சிறையில் அடைக்கப்பட்டுள்ள கலகொட அத்தே ஞானசார தேரரை விடுவிக்குமாறு அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாட்டின் மகாநாயக்க தேரர்கள் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். ஞானசாரவிற்கு 4 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து இந்த வருடம் மார்ச் 8 அன்று தீர்ப்பளிக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டு கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது குரகல பௌத்த விகாரை தொடர்பில் கருத்து வெளியிட்ட கொழும்பு மேல் நீதிமன்றினால் தேசிய மற்றும் மத நல்லிணக்கத்திற்கு பங்கம் விளைவித்தார் என்று அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இதே ஞானசார தேரர் இதற்கு முன்னரும் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டபோது அரசுத்தலைவராக இருந்தவரான மைத்திரிபால சிறிசேன அவருக்கு மன்னிப்பு வழங்கியிருந்தார். நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டின் கீழ் ஞானசார தேரருக்கு அப்போது தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. அவருக்கு மன்னிப்பு வழங்கிய மைத்திரியின் செயலை எதிர்த்து மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் தாக்கல் செய்த வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது.

அதேபோன்றே, யாழ். மாவட்டம், மிருசுவிலில் 8 அப்பாவிப் பொது மக்களைக் கொலை செய்த குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு தூக்குத் த்ண்டனை விதிக்கப்பட்ட இராணுவ சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்கவுக்கு முன்னாள் அரசுத் தலைவர் கோட்டாபய ராஜபக்ச மன்னிப்பு வழங்கியதற்கு எதிரான வழக்கும் இன்னும் நிலுவையில் உள்ளது.

கடந்த காலங்களில் பல்வேறு அரசுத் தலைவர்களால் வழங்கப்பட்ட பெரும்பாலான மன்னிப்புகள் பொது மக்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை, அதுவும் பாதிக்கப்பட்ட தரப்பைச் சேர்ந்த மக்களால் ஏற்றுக்கொள்ளப்படவேயில்லை. ஏனெனில் அரசுத் தலைவரின் நடவடிக்கைகள் அரசியல் அல்லது வெளிப்படையான இனவாத அடிப்படையில் அமைந்தவை. 2005ஆம் ஆண்டு இரட்டைக் கொலைக் குற்றத்திற்காக தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் அமைச்சரின் மனைவியான மேரி ஜுலியட் மோனிகா பெர்னாண்டோவுக்கு 2009ஆம் ஆண்டு மார்ச் மாதம் முன்னாள் அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்ச மன்னிப்பு வழங்கியமையே இத்தகைய முறைதவறிய மன்னிப்புக்களுக்கான முதல் உதாரணம்.

நீதிமன்றம் நீண்ட விசாரணைகளுக்குப் பின்னர் தண்டனை விதித்த இதுபோன்ற கைதிகளுக்கு அரசுத் தலைவர் மன்னிப்பு வழங்குவது என்பது அடிப்படையில் நீதிமன்றச் செயற்பாடுகளைக் குறைமதிப்பீடு செய்வதற்கு ஒப்பானது.

முதலில் நீதிமன்றத்தால் தண்டனை பெற்ற ஒருவருக்கு அரச தலைவர் ஏன் மன்னிப்பு வழங்க வேண்டும் என்பதுதான் ஒருவர் முன்வைக்க வேண்டிய முக்கியமான கேள்வி.

கீழ் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்ய முடியாமல் சிறையில் வாடுபவர்களாக இருந்தால் அல்லது அரசியல் தேவைகளுக்காக, தான் சார்ந்த அமைப்பின் கொள்கைக் காரணங்களால் நீதி தவறியதற்காகத் தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு மன்னிப்பு வழங்கினால் அதை ஏற்றுக்கொள்ளலாம். முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மற்றும் பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க ஆகியோர் விடயத்தில் அரசுத் தலைவர் மைத்திரி வழங்கிய மன்னிப்புக்கள் அந்த வகையில் ஏற்றுக்கொள்ளத்தக்கவை. ஆனால், தமது சொந்த அரசியல் நலன்களுக்குகாக பொதுமக்களின் கருத்துக்களுக்குப் புறம்பாக, வழங்கப்படும் பொது மன்னிப்புக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை. அது நீதித்துறையின் மீதான மக்களின் நம்பிக்கையையே தகர்த்துவிடும் ஆபத்தைக் கொண்டிருக்கின்றன. எனவே அது போன்ற நடவடிக்கைகள் இனிவரும் காலங்களில் முழுமையாக நிறுத்தப்படவேண்டும். நீதித்துறையின் சுயாதீனமும் மரியாதையும் காப்பாற்றப்படவேண்டும்.

# சைவத்தின் வழி நடந்த தமிழ்ச் செல்வி தங்கம்மா

(சைவத்தின் வழி நடந்த தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் நினைவுதினம் இன்று)











**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

பக்தி என்னும் கருவினை எந்த மொழியும் இலக்கியம் ஆக்கி யதே இல்லை. ஆனால் பக்தியை உயர்வாக்கிப் பார்த்து அதனை இலக்கியமாய் காட்டிய பெருமை எங்கள் அன்னைத் தமிழ் மொ ழிக்கு மட்டுமே வாய்த்திருக்கிறது. " பக்தி இலக்கியம் " என் று ஒரு பெரும் பகுதியை தமிழ் மொழியானது தன்னுடை இலக்கிய வரலாற்றில் கொண் டிருக்கிறது என்பதும் முக்கியம் எனலாம். பக்தி இலக்கியம் என்னும் பெருவெளியில் ஆண்களும் வருகி றார்கள். பெண்களும் வருகிறார்கள். பக்தி இல க்கியப் பாதையில் முகிழ்த்த பாடல்கள் அத்தனையும் - இறையருளைப் பற்றியன வாக இருந்த பொழு தும் அவை அத்தனையும் அன்னைத் தமிழின் அழகோவியமாய் , அருங்கருத்துக் களை அடக்கியவனாவாய் , இலக்கியச் சுவைகளை ஈவதாய் , புலவர்க்கெல்லாம் நல் விருந்தாய் , தமிழுக்கே பெரும் பொக்கிஷமாய் வாய்த்த நல் வரமென்றே எண்ண வேண்டி இருக்கிறது. அந்தப் பக்தி இலக்கிய வெளி யிலே காலத்துக்காலம் ஆண் டவன் அருளால் பல அருளாளர்கள் வந்து இணைகிறார்கள். அந்தவகையில் ஈழத்தில் நல்லை நகரில் நாவலர் பெருமான் வருகின்றார். அவரின் அடிபற்றி எங்கள் சைவத் தின் கொழுந்து , சைவ வழி பற்றிட வருகின்றார் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி அவர்கள்.

காரைக்கால் அம்மையார் , திலகவதியார் , மங்கையற்கரசியார் , வழியில் பயணப்பட வந்தமைகின்றவராய் எங்கள் தமிழ்ச் செல்வி தங்கம்மா அவர்களைப் பார்க்கின் றோம். முன்னவர்கள் வாழ் ந்த காலமும் , சூழலும் வேறாகும். அதனால் அவர்களின் செயற் பாடுகளும் அக்காலத்துக்கு இயைபானதாக ஆகியிருந்தது. ஆனால் தமிழ்ச் செல்வி தங்கம்மா அவர்கள் வாழ்ந்த காலமும் , சூழ லும் - அவரின் செயற்படுகின்ற பாங்கினைத் தீர்மானித்தது என்பதை மனமிருத்துவது முக்கியமாகும்.

சாதாரண குடும்பத்தில் சாதாரண பிள்ளையாகவேதான் தங்கம்மா அவர்கள் பிறக்கி றார்கள். அவர் பிறக்கும் வேளை எந்த வொரு அதிசயங்களோ , அற்புதங்களோ நிகழ வில்லை. சாதா ரணமாகவே பிறந்தார். சாதாரணமாகவே படித்தார். சாதாரண மாகவே ஒரு ஆசிரியர் வேலையும் பார்த்தார். ஆனால் அவர் மற்றவர்களைப்போல் " சாதாரண மானவர் அல்ல, சாதிக்கப் பிற ந்த சன்மார்க்க நங்கை " என்பதை இறைவன் ஏற்க னவே அவரின் பிறப்பிலே எழுதி வைத்துவிட்டான் (11ஆம் பக்கம் பார்க்க...)

## தங்கம்மா எங்களம்மா சமயவழி நின்ற அம்மா !



தங்கம்மா எங்களம்மா சமயவழி நின்றவம்மா
பொங்கிவரும் ஆசைகளை பொசுக்கிட்டார் எங்களம்மா
திங்களணி எம்பிரானைத் தினமெண்ணும் தங்கம்மா
மங்கலமாம் சுடராக வலம்வந்தார் மாநிலத்தில்

இல்லறத்தில் இணையாமல் நல்லறத்தில் இணைந்தாரே
உள்ளமதில் உறுபொருளை ஊன்றியே விதைத்தாரே
ஊர்சிறக்க வாழ்நாளை உவந்தளித்தார் அம்மாவும்
பார்முழுக்க அவர்நாமம் பரவியே நிற்கிறதே

ஆசானாய் கால்பதித்து ஆன்மீகம் தேர்ந்தெடுத்தார்
ஆசையுடன் அரனடியை அவரகமும் பற்றியதே
மாசுமறு வணுகாமல் வழிகண்டார் அம்மாவும்
காசினியில் யாவருமே கைகூப்ப வாழ்ந்தாரே

சைவத்தைத் தத்துவத்தை தான்சொத்தாய் ஆக்கினரே
மெய்யான பரம்பொருளை விலகிவிடா திருந்தனரே
அரனடியார் பாதையிலே அவர்செல்ல விரும்பினரே
அதனாலே அவர்பாதை அனைவரகம் அமர்ந்ததுவே

நாயன்மார் சிந்தனையில் நல்லதமிழ் தேர்ந்தெடுத்து
சங்கத் தமிழோடு சந்தத் தமிழுரைத்தார்
பக்தியொடு பக்குவத்தைப் பாங்காக எடுத்துரைக்க
எங்களம்மா தங்கம்மா ஏகிநின்றார் பலவிடங்கள்

நல்லைநகர் நாவலரை நாம்மறக்க மாட்டோமே
அவ்வழியில் செல்லவல்லார் யார்வருவார் எனநினைத்தோம்
எங்களம்மா தங்கம்மா வந்தமைந்தார் அந்நிலையில்
அந்தத் திருமகளை அகமிருத்திப் போற்றுவமே

சைவத்தைத் தமிழைக் காக்கவந்த காவலனாய்
நல்லைநகர் பெருமானும் நம்நாட்டில் பிறந்தனரே
அவர்பிறந்து பலகாலம் ஆனததன் பின்னாலே
அவர்பணியைத் தொடர்வதற்கு பிறந்திட்டார் அம்மாவும்

ஆலயத்தைத் தேர்தெடுத்து ஆற்றினார் சொற்பெருக்கை
அகமிருக்கும் அழுக்குகளை அகற்றிவிடக் கருத்துரைத்தார்
அம்மாவின் சொற்பெருக்கை அடியார்கள் பருகிநின்றார்
ஆலயத்தை வாழ்வாக்கி அம்மாவும் அமைந்துநின்றார்

தெல்லிநகர் பதியினையே தேர்ந்தெடுத்தார் எங்களம்மா
நல்லிதயம் மலர்ந்ததனால் நற்பணிகள் பலதொடர்ந்தார்
அல்லல்படும் மக்களினை அடையாளம் அவர்கண்டார்
அரவணைத்து கைகொடுத்து அவர்வாழ வழிவகுத்தார்

துர்க்கையம்மன் சன்னதியைத் துயர்துடைக்கும் இடமாக்கி
சாந்தி நிலையமாய் வளர்த்துநின்றார் எங்களம்மா
தங்கம்மா எனும்நாமம் சஞ்சலத்தைப் போக்குதற்கு
தக்கதொரு மருந்தாக அமைந்துமே இருந்ததுவே

ஆன்மீகம் என்பதற்கு அவர்விளக்கம் கண்டார்கள்
அல்லலினைப் போக்குவதை அகமிருத்தி நின்றார்கள்
ஆணவத்தை வெறுத்தார்கள் அன்புநிலை அணைத்தார்கள்
ஆர்மனமும் நோகாமல் அவருரைத்தார் நன்மொழிகள்

பல்கலைக் கழகத்தார் வழங்கிநின்றார் பட்டத்தை
பலசபைகள் பல்லமைப்பும் வழங்கினார் பட்டமெலாம்
என்றாலும் அவர்பெயரில் இணைந்த ஒருபட்டமாய்
சிவத்தமிழ் செல்வியே தெரிகிறது ஒளியாக

காலைக்கதிர் Kalaikkathir

# இன வேறுபாடுகளின்றி நாட்டின் முன்னேற்றத்துக்கு ஜனாதிபதி தன்னை அர்ப்பணித்து செயற்படுகிறார்

## காரைதீவில் முஷாரப் எம்.பி.புகழாரம்



(எஸ்.அஷ்ரப்கான்)

அண்மையில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி உள்ளிட்ட பல்வேறு தாக்கங்களினால் வீழ்ச்சியடைந்திருந்த நாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கட்டம் கட்டமாக முன்னிலைக்கு கொண்டுவருவதாகவும் அவர் இன மத பிரதேச வேறுபாடின்றி நாடு என்ற ரீதியில் பணியாற்றி வருவதாகவும் அவரது நிருவாகத்தின் கீழ் நாட்டை முன்னிலைக்கு கொண்டுசெல்ல முடியும் என காரைதீவு பிரதேசம் உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களின் ஒருங்கிணைப்பு குழு தலைவரும், நாடாளுமன்ற உறுப்பிருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து காரைதீவு பிரதேச செயலக எல்லைக்குப்பட்ட நிறுவனங்களுக்கும் நிர்மானங்களுக்குமாக சுமார் பத்து மில்லியன் ஷரூபாவுக்கும் அதிகமான நிதியை ஒதுக்கீடு செய்திருந்தார்.

அதன் ஒரு கட்டமாக சமூக சேவை நிறுவனங்களுக்கும் விளையாட்டு கழகங்களுக்கும் பொருட்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு காரைதீவு பிரதேச செயலக வளாகத்தில் 2024.06.11 ஆம் திகதி பிரதேச செயலாளர் திருமதி ராகுலநாயகி சஜிந்ரன் தலைமையில் இடம்பெற்றது.

காரைதீவு பிரதேச செயலக திட்டமிடல் உத்தியோகத்தர் பி. ராஜகுலேந்ரனின் நெறிப்படுத்துதலில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு நாடாளுமன்ற உறுப்பிருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பொருள்களை வழங்கி வைத்தார்.

நிகழ்வின்போது காரைதீவு பிரதேச சபை முன்னாள் உப தவிசாளரும், அந்நூர் ஜ/ம்ஆ பெரிய பள்ளிவாசலின் உதவித்தலைவரும் ஜாஹீர் பௌண்டேசன் மற்றும் சமூக அபிவிருத்தி சபையின் ஸ்தாபக தலைவருமான ஏ.எம். ஜாஹீர், பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர் ஏ.எம். அஷாம் மௌலவி உள்ளிட்ட அதிதிகளும் பிரசன்னமாகியிருந்தனர். குறித்த நிகழ்வின்போதே பாராளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார். நாடு வீழ்ச்சியை நோக்கி சென்று கொண்டிருந்த வேளை நாட்டை மீட்ட சிறந்த தலைவராக தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களை பார்ப்பதாகவும் அவரது ஆட்சியில் நாட்டை முன்னிலைக்கு கொண்டுசெல்ல முடியும் என்றும் தெரிவித்தார். இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தனின் வேண்டுகோளின் கீழ் சில பணிகளை காரைதீவு பிரதேச செயலக எல்லைக்குள் செய்ததாகவும் எதிர்காலத்தில் சம்பந்தப்பட்டவர்கள் என்னிடமே தாங்களது குறைகளை நிவர்த்திக்க முடியும் என்றும் தான் எந்த சந்தர்ப்பத்திலும் இன பிரதேச ரீதியாக செயற்படுபவன் அல்லன் என்றும் தெரிவித்தார். (05)

# சம்மாந்துறை குவாஷி நீதிமன்ற பதில் நீதிபதியாக அஹமட் லெவ்வை ஆதம்பாவா நியமனம் பெற்றார்!



(பாறுக் ஷிஹான்)

நீதிச்சேவை ஆணைக்குழு வின் தீர்மானத்தின் பிரகாரம் பதில் குவாஷி நீதிபதியாக சம்மாந்துறை குவாஷி நீதிமன்றத்தின் கடமையாற்ற ஜனாப் அஹமட் லெவ்வை ஆதம்பாவா பதில் கடமை புரிய பணிக்கப்பட்டதனைத் தொடர்ந்து அதனை ஏற்றுக் கொண்டு 11.06.2024 ஆம் திகதி கல்முனை மேல் நீதிமன்றத்தின் மேல் நீதிமன்ற நீதிபதி ஜெயராமன் றோக்ஸி முன்னிலையில் சத்தியப்பிரமாணமும் உறுதி உரையும் எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன் போது மேல் நீதிமன்ற பதிவாளர் எஸ். எச்.எஸ். ஹக்கீமுல்லாஹ் கலந்து கொண்டார். (05)


# குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

தொடர்புகளுக்கு: 0777 43 5557

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# முன்பள்ளி மாணவர்களுக்கான விளையாட்டு போட்டி நிகழ்வு



(எஸ்.அஷ்ரப்கான்)

பொத்துவில் மறுவடிவம் அறக்கட்டளை அமைப்பின் ஏற்பாட்டில், மறுவடிவம் அறக்கட்டளை அமைப்பினரின் ஐந்து வருட பூர்த்தியை முன்னிட்டு முன்பள்ளி மாணவர்களுக்கான விளையாட்டு போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் அன்மையில் பொத்துவில் களப்புக்கட்டு சிறுவர் பூங்காவில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் றிஸ்லி முஸ்தபா எடியுகேசன் எய்ட் சமூக சேவைகள் அமைப்பின் சார்பாக முன்பள்ளி மாணவர்களுக்கான பாடசாலை புத்தகபை மற்றும் கொப்பிகள் வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்விற்கு அமைப்பின் உறுப்பினர்களான ஏ.ஜே. எம்.ஹஸான் மற்றும் எம்.எம்.அம்ஜத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(05)

# இரணைதீவு றோ.க.த.கவில் சிமாட் வகுப்பறை திறப்பு

## சஜித் பிரேமதாஸவால் அன்பளிப்பு



கிளிநொச்சி இரணைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் அமைக்கப்பட்ட ஸ்மார்ட் வகுப்பறை எதிர்க்கட்சி தலைவர் சஜீத் பிரேமதாஸவால் திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை முதல்வர் தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் கட்சி பிரதிச்செயலாளர் உமாச்சந்திரா பிரகாஸ், கட்சியின் குறித்த பிரதேச அமைப்பாளர் முகமட் ஹாசிம் ,பாடசாலை அதிபர் ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தை தகவல் தொழில்நுப்ப மையமாக மாற்றியமைப்பதுடன் விவசாயத்தையும் நவீன மயமாக்குவதாகவும் 76 வருடமாக ஜனாதிபதி பதவிக்கு வந்து செய்யாததை பதவிக்கு வர முன்னரே மக்களுக்கு செய்து வருவதாக குறிப்பிட்டிருந்தார்.

(05- 113)

# கிழக்கில் மாணவர்களுக்கு போக்குவரத்து பாதுகாப்பு சீருடைப் பொதி வழங்கிவைப்பு

*(வி.ரி.சகாதேவராஜா)*

*கிழக்கு மாகாண முதலமைச்சர் பணிமனையால் வழங்கப்பட்ட பாடசாலை மட்டத்திலான போக்குவரத்து பாதுகாப்பிற்கான சீருடைப் பொதி கிழக்கில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன.*

*அந்த வகையில் திருக்கோவில் வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு சீருடைப் பொதி வழங்கும் நிகழ்வு வலயக் கல்வி பணிப்பாளர் ரி.உதயகுமார் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டது.*

*இந் நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் -(கல்வி அபிவிருத்தி) ஏ. நசீர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.*

*(05)*


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

## இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருவார் என எதிர்பார்க்கின்றோம். அதனையடுத்து இந்தியப்பிரதமரின் வருகையும்விரைவில்இடம்பெறும் என நம்புகிறோம்.

இக்காலகட்டத்தில் ஆளும்தரப்பு பெரும்வெற்றிகளைஅடைந்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டம் தொடர்பான இரண்டாவது மீளாய்வை வெற்றிகரமாக முடித்தமைக்கு சர்வதேச நாணய நிதியம் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

அதன்படி, சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதி தொடர்பான மூன்றாவது தவணை விடுவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கம்காணப்பட்டவிடயங்களை நாம் மிகத் துல்லியமாகக் கையாண்டுள்ளோம் என்பதே இதன் மூலம் தெளிவாகின்றது.

வெளிநாட்டுக் கடன் முகாமைத்துவம் மற்றும் மறுசீரமைப்புச் செயற்பாடுகளும் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன. வெளிநாடுகளுடன் கடன் முகாமைத்துவம் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட முடியும் என்றும் நம்புகிறோம்.வெளிநாட்டுபிணைமுறி உரிமையாளார்களுடனான கலந்துரையாடல் சாதகமானதாக அமைந்துள்ளது. அது வெற்றியடையும் பட்சத்தில் இலங்கை கடன் செலுதாத சூழ்நிலையில் இருந்து விடுபட்டுகடனைதிருப்பிச்செலுத்தும் நாடாக மாற முடியும்.

அத்துடன், ஜப்பானிய வெளிவிவகார அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்கஅடுத்தமாதம்நான்ஜப்பான் செல்லவுள்ளேன். இருதரப்பு உத்தியோகபூர்வகடன்வழங்குநர்களுடன் உடன்பாடு எட்டப்பட்ட பின்னர், ஜப்பானின் ஆதரவுடன் இந்நாட்டில் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது தடைப்பட்டுள்ள அனைத்து அபிவிருத்தித்திட்டங்களும்மீண்டும் தொடங்கப்படும் என்று ஜப்பான் உறுதியளித்துள்ளது.

அண்மையில், ரஷ்யாவில் நடைபெற்ற பிரிக்ஸ் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில், இலங்கையைபிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்றேன். பிரிக்ஸ் அமைப்பில் இலங்கை இணைய வேண்டுமா என்பது குறித்து கலந்துரையாட வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்துள்ளது.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, திறைசேரி, நிதியமைச்சு மற்றும் மத்திய வங்கி ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் குழுவொன்று இந்த விடயத்தை பரிசீலிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ளது. குறித்த அறிக்கை இம்மாதம் கிடைத்தபின்னர்அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும்.

ரஷ்ய இராணுவத்தில் இணைந்துள்ள முன்னாள் படையினர் குறித்து ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் உடன் மேலும் கலந்துரையாடினோம். இப்பிரச்சினைக்குத் தீர்வு காண வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய உள்ளிட்ட குழுவினர் ரஷ்யாவிற்குச் செல்லவுள்ளனர்.

இது தொடர்பான கலந்துரையாடல்கள் ஜூன் 26, 27 ரஷ்யாவில் நடைபெறும். இதேவேளை, மியன்மாரில்சிக்கியுள்ளஇலங்கையர்களை மீட்பதற்கானகலந்துரையாடல்களும் இந்நாட்களில்தொடங்கப்பட்டுள்ளன - என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

## பொருளாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீட்டெடுப்பதற்கும், நீண்ட கால வளர்ச்சியைமேம்படுத்துவதற்கும் சீர்திருத்த வேகத்தை நிலைநிறுத்துவதற்கும் பொருளாதாரக் கொள்கைகளைத் தொடர்ந்து வலுப்படுத்தவேண்டும்.

இலங்கையின் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்காக கடன் மறுசீரமைப்பை முன்னெடுப்பதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைபணிப்பாளர்கள் வரவேற்றுள்ளனர். உத்தியோக பூர்வகடன்வழங்கும்குழுவுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை விரைவாக நிறைவு செய்யவும், சீனாவின் ஏற்றுமதி-இறக்குமதி வங்கியுடனான ஒப்பந்தம் இறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இலங்கையில் தேர்தல் ஜனநாயக ரீதியில் இடம்பெற வேண்டும். உள்ளக தேர்தல் விவகாரங்களில் சர்வதேச நாணய நிதியம் ஒருபோதும் தலையிடவில்லை. தேர்தல் தொடர்பில் இலங்கை மக்களே தீர்மானிக்க வேண்டும். தேர்தல் ஒன்று இடம்பெறுமாயின் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடிபுதியகாலவரைபை தயாரித்துக் கொள்ள வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை ஏற்றுக் கொண்டுள்ள அத்துடன் தற்போது செயற்படுத்தியுள்ள யோசனைகளையும்,மறுசீரமைப்புக்களையும் தொடர வேண்டும் என்பது அவசியமாகும். ஏனெனில் இலங்கைபொருளாதாரநெருக்கடியில்இருந்துஇன்னும்முழுமையாக மீட்சிப்பெறவில்லை என்றார்.

## புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவையில்இணைத்துக்கொள்வதாக இருந்தால், அமைச்சரவையின் அனுமதி பெறப்பட வேண்டும் என கல்விஅமைச்சின்செயலாளர்திலகா ஜயசுந்தர குறிப்பிட்டார்.

குறித்த பட்டதாரிகள் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டால், சம்பளக் கொடுப்பனவுகளுக்காக 7000 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமானதொகைதேவைப்படுமென செயலாளர் கூறினார்.




# மருத்துவ துறைக்கு தெரிவான மாணவன் நீரில் மூழ்கிச் சாவு

(சகா. தேவராஜா,
பாறுக் ஷிஹான்)



காரைதீவைச் சேர்ந்த மாணவன் எஸ்.அக்சயன் (வயது-20) நேற்று (வெள்ளிக்கிழமை) காலை லாகுகல பிரதேசத்திற்குட்பட்ட நீலகிரி ஆற்றில் நீராடுகையில் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தார்.

சிவகரன் ஜீவரஞ்சனி தம்பதியினரின் ஒரேயொரு பிள்ளை அக்சயன் ஆவார். காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியில் இம்முறை மருத்துவத் துறைக்கு தெரிவான இரண்டு மாணவர்களுள் அக்சயன் ஒருவராவார்.

இவர் அண்மையில் வெளியான க.பொ.த. உயர்தரம் 2023 (2024) பரீட்சையில் சித்திபெற்று மாவட்டத்தில் 23 ஆவது இடத்தில் மருத்துவ துறைக்கு தெரிவாகியிருந்தார்.

அவர் தனது குடும்பத்தோடு மூன்று நாள்களுக்கு முன்பு உகந்த மலை முருகன் ஆலயத்துக்கு சென்று அங்கு தரித்துவிட்டு வெள்ளிக்கிழமை காலை வரும்பொழுது பொத்துவில் மற்றும் லாகுகலைக்கிடையிலுள்ள நீலகிரி ஆற்றிலே நீராடிய போது மூழ்கி மரணமானார்.

அவரது பூதவுடல் மேலதிக விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைக்காக லாகுகலை வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மருத்துவ துறைக்கு தெரிவான எஸ்.அக்சயன் நீரில் மூழ்கி உயிரிழந்தார் செய்தி காட்டுதீ போல் பரவியது. முழுக் காரைதீவு பிரதேசமுமே சோகத்தில் மூழ்கியுள்ளது.

அம்மாணவனின் சடலம் லவுகலை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. (05)



# மட்டு. செயலக தளபாட கொள்வனவுக்காக 7 கோடியே 50 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

ஒல்லாந்தர் கோட்டையில் இயங்கிவந்த மாவட்ட செயலகத்தின் இடவசதி பற்றாக்குறையின் காரணமாக புதிய மாவட்ட செயலக கட்டத்திற்கான ஆரம்ப வேலைகள் திராய்மடு பகுதியில் கடந்த 2016 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும் நிர்மாண பணிகள் மிக நீண்ட காலமாக முடிவுறுத்தப்படாமலிருந்த நிலையில், மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவராக சிவ. சந்திரகாந்தன் பொறுப்பேற்றதன் பின்னர், பல்வேறு வழிகளிலும் இதற்கான நிதியினை பெற்றுக்கொள்வதற்கு அமைச்சு மட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் பலனாக, புதிய மாவட்ட செயலகத்தின் பணிகளை முழுமையாக முடிவுறுத்தி இந்த ஆண்டு மக்கள் பாவனைக்கு வழங்குவதற்கான சாத்தியப்பாடு உருவாகியுள்ளது.



அந்த வகையில் மட்டக்களப்பு திராய்மடுவில் அமைந்துள்ள புதிய மாவட்ட செயலக கட்டடத்தை, கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ.சந்திரகாந்தன் கடந்த ஏப்ரல் 30 ஆம் திகதி அன்று பார்வையிட்டிருந்தார்.

புதிய மாவட்ட செயலகத்தின் நிர்வாக நடவடிக்கைகளை முழுமையாக இயங்க செய்து விரைவில் மக்கள் பணிகளை ஆரம்பிக்கும் வண்ணம் பணிகள் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், மாவட்ட செயலகத்தில் இதுவரை முடிவுறுத்தப்பட்டுள்ள பணிகள் தொடர்பாகவும், அவற்றினை மக்கள் பாவனைக்காக விரைவாக வழங்குவதற்கு தேவையான ஏனைய அடிப்படை வசதிகள் தொடர்பாகவும், குறித்த கள விஜயத்தின் போது இராஜாங்க அமைச்சரால் விசேட கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

மேற்படி மாவட்ட செயலக கட்டடமானது புதிதாக நிர்மாணிக்கப்பட்டு முடிவுறும் தருவாயில் உள்ள போதிலும் அலுவலக தளவாட கொள்வனவிற்கான நிதி ஒதுக்கீடானது மேற்கொள்ளப்படாமையின் காரணமாக குறித்த நேரத்தில் மாவட்ட செயலகத்தின் செயற்பாடுகள் முன்னெடுப்பதில் தொடர் தாமதநிலை ஏற்பட்டு வந்தது. இது தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர் அவர்களால் இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ.சந்திரகாந்தன் அவர்களிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டு வந்த நிலையில், குறித்த கள விஜயத்தின் போது அலுவலக தளபாட பற்றாக்குறை தொடர்பான விடயமானது மிகப் பிரதான விடயமாக இராஜாங்க அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

எனவே குறித்த விடயம் தொடர்பில் கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ.சந்திரகாந்தன் அவர்கள் நாட்டின் பிரதமரும், பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன அவர்களிடம் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் புதிய மாவட்ட செயலக தளபாட கொள்வனவுகளுக்காக 75 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ. சந்திரகாந்தனால் இரண்டு கட்டங்களாக பெற்றுக் கொடுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் ஊடாக கட்டட நிர்மாண பணிகள் நடைபெற்று நிறைவுபெறும் நிலையில் உள்ள குறித்த புதிய மாவட்ட செயலக புதிய கட்டடத் தொகுதியில் பாதியளவு நிர்வாக நடவடிக்கைகள் நேற்றைய தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் இராஜாங்க அமைச்சர் சிவ. சந்திரகாந்தன் அவர்களின் அழைப்பை ஏற்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வருகை தரவுள்ள பிரதமர் தினேஷ் குணவர்த்தனவால் மேற்படி கட்டட தொகுதி திறந்து வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். குறித்த விஜயத்தின் போது, மட்டக்களப்பு மாவட்ட செயலக பதில் திட்டமிடல் பணிப்பாளர் ஜதீஸ்குமார், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் நிர்மலராஜ், பொறியியலாளர் எந்திரி. சுமன் மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவரின் பிரத்தியேக செயலாளர் த. தஜீவரன் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (05)

## ஆட்கடத்தலை எவ்வாறு தடுப்பது? காரைதீவில் பயிற்சிப் பட்டறை

### மனித அபிவிருத்தி தாபனம் ஏற்பாடு





(வி.ரி. சகாதேவராஜா)

ஆட்கடத்தலை எவ்வாறு தடுப்பது? என்பது தொடர்பிலான பயிற்சி பட்டறையொன்று செவ்வாய்க்கிழமை காரைதீவில் நடைபெற்றது.

மனித அபிவிருத்தி தாபனம் ஏற்பாடு செய்த இப் பயிற்சிப்பட்டறை தாபன இணைப்பாளர் பி.சிறிகாந்த் தலைமையில் காரைதீவு லேடிலங்கா மண்டபத்தில் நடைபெற்றது.

கல்முனை மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் ஏ.பீ.ஏ. அசிஸ் வளவாளராக செயற்பட மனித அபிவிருத்தி தாபன கிழக்கு மாகாண ஆலோசகரும் உதவிக் கல்வி பணிப்பாளரும் மற்றும் சிரேஸ்ட ஊடகவியலாளருமான வி.ரி. சகாதேவராஜா தொடக்கவுரையாற்றினார்.

இதில் அரச உத்தியோகஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கையில் கொவிட் தாக்கத்தின் பின் பொருளாதார மற்றும் உணவு நெருக்கடி காரணமாக பெண்கள் அதிகமாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு புலம்பெயர்ந்த வீட்டு பணியாளர்களாக சென்றுள்ளனர். இதன் பின்னணியில் பாலியல் சுரண்டல், புலம்பெயர்ந்த பெண் தொழிலாளர்கள் மற்றும் சிறுமிகள் மத்தியில் கட்டாய திருமணம் என்பன தொடர்ந்து ஆட்கடத்தலை துரிதப்படுத்துகின்றது.

அந்த வகையில் அம்பாறை மாவட்டத்தில் மனித அபிவிருத்தி தாபனம் தடுத்தல் பாதுகாத்தல் மற்றும் வழக்கு பதிவிடல் உபாயங்களினூடாக ஆட்கடத்தலை எதிர்த்து போராடுவதற்கு பங்களிப்பு செய்தல் திட்டத்தினை க்லோபல் இனிடியேட்டிவ் அனுசரணையில் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

அத்துடன் ஆட்கடத்தல் செயற்பாடானது சட்டவிரோத செயற்பாடுகளில் ஒன்றாக காணப்படுவதால் இவற்றில் இருந்து மக்களை பாதுகாப்பது எல்லாதுறையினரினதும் கடமை என்பதுடன் தனி ஒவ்வொரு மனிதனது பொறுப்பாகும் என மனித அபி விருத்தி தாபன திட்ட இணைப்பாளர் பி. ஶ்ரீகாந் தெரிவித்தார்.

உதவி இணைப்பாளர் எ.எம். றியால் நிகழ்வை நெறிப்படுத்தினார். (05)

## 600 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொல்லப்பட்டு 34ஆவது வருட ஞாபகார்த்த நிகழ்வு அனுஷ்டிப்பு







(பாறுக் ஷிஹான்)

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த சுமார் 600 பொலிஸார் படுகொலை செய்யப்பட்டு 34 ஆண்டுகள் நிறைவடைந்ததை அனுஸ்டிக்கும் முகமாக நிகழ்வு செவ்வாய்க்கிழமை அம்பாறை பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் அமைந்துள்ள ரணவிரு ஞாபகார்த்த நினைவு தூபியில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வின் போது அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என் ஜயபத்ம உள்ளிட்ட பொலிஸ் உயரதிகாரிகள் பொலிஸார் ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் இந்நிகழ்வின் முக்கிய அம்சமாக தமிழீழ விடுதலைப் புலிகளால் 1990 ஆம் ஆண்டு கடத்திக் கொல்லப்பட்ட பொலிஸார் உட்பட யுத்தத்தால் உயிர்நீத்த மற்றும் கடந்த கால யுத்தம் உள்ளிட்ட இதர காரணங்களினால் மரணமடைந்த பொலிஸாரின் குடும்பங்களில் உள்ள சிறுவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் செயற்பாடுகள் இதன் போது முன்னெடுக்கப்பட்டன.

இது தவிர நிகழ்வின் ஆரம்பத்தில் அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என் ஜயபத்மவினால் பொலிஸ் கொடி அரை கம்பத்தில் ஏற்றப்பட்டதுடன் உயிர்நீர்த்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை ,பொத்துவில், அக்கரைப்பற்று, சம்மாந்துறை, உள்ளிட்ட பல பொலீஸ் நிலையங்களை முற்றுகையிட்ட புலிகள் சகல சிங்கள முஸ்லிம் பொலீசார்களையும் ஆயுதங்களையும் அள்ளிச் சென்றார்கள். அதன் பின்பு திருக்கோவில் பகுதியில் உள்ள ஷரூபஸ் குளம் காட்டுப் பகுதியில் சகல பொலிசாரும் சுட்டுக் கொல்லப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது. (05)

# தேசிய புலனாய்வு பிரிவு தகவலிற்கமைய மந்திகையில் கஞ்சாவுடன் ஒருவர் கைது



அரச புலனாய்வு சேவையின் தகவலுக்கமைய கேரள கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்ட கற்கோவளம் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் 02 கிலோ 300 கிறாம் கேரள கஞ்சாவுடன் மந்திகை பகுதியில் வைத்து நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். நீண்ட காலமாகக் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபடும் குறித்த நபர் தொடர்பில் அரச புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வந்த அரச புலனாய்வு பிரிவினர் 13 ஆம் திகதி வியாழக்கிழமை விற்பனை நோக்கத்திற்காகக் கஞ்சாவைக் கொண்டு செல்லும்போது குறித்த கஞ்சாவுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். மேற்படி சந்தேக நபரிடம் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுவரும் நெல்லியடி பொலிஸார் நேற்று (வெள்ளிக்கிழமை) பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தினர். (05)

# ஆலயக் கதவு திறந்த அதே தினம் ஆலயத் தலைவர் பரிதாபச் சாவு

## கோரக்கர் கிராமத்தில் சம்பவம்

(வி.ரி சகாதேவராஜா)

ஆலயக்கதவு திறந்த அதே தினம் ஆலயத் தலைவர் மரணமான சம்பவம் சம்மாந்துறை கோரக்கர் கிராமத்தில் செவ்வாய்க்கிழமை இரவு இடம் பெற்றது.

சம்மாந்துறை, கோரக்கர்கிராம அகோரமாரியம்மன் ஆலயம் மற்றும் கோரக்கர் பிள்ளையார் ஆலய பரிபாலன சபையின் தலைவர் ம.பாலசுப்பிரமணியம்(வயது 66)என்பவரே இவ்வாறு இறைபதமடைந்தவராவார்.

செவ்வாய்க்கிழமை காலை வருடாந்த தீமிதிப்பு திருவிழா உற்சவத்திற்காக ஆலயபூசகர் மு.ஜெகநாதன் தலைமையில் கடல் நீர் எடுத்து வந்து ஆலயக் கதவு திறக்கப்பட்டது.

அன்றிரவு 7 மணியளவில் ஆலய பரிபாலன சபையின் தலைவர் பாலசுப்பிரமணியம் இறைபதமடைந்தார். கடந்த 25 வருடகாலமாக இறைபணி செய்த அவரின் மரணச் செய்தி பலரது மனங்களையும் நெகிழச்செய்தது.

புதன்கிழமை அவரது பூதவுடல் கோரக்கர் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. (05)

# சைவத்தின் வழி நடந்த...........

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

என்பதுதான் யதார்த்தமாகும். இப்ப டியானவர்களைத்தான் " கருவிலே திருவுடையார் ", " வரம்பெற்று வந்தவர் ", என்று வியந்து நிற்கிறார்கள் போலும். வரம் பெற்று வந்த காரணத்தால் , தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் - தம் காலத்தில் செய்ய வேண்டிய சிறப்பான அத்தனையும் செய்து பயன் மிக்கவராய் ஒளிவிட்டு நின்றார் என்றால் அஃது மிகையாகாது.

தமிழ்ச் செல்வி தங்கம்மா அவர்களைப் பல பரிணாமங்களில் பார்ப்பதுதான் உகந்த தாகும். சைவத்தை நன்கு கற்று சைவப் புல வர் ஆகுகின்றார். தமிழை முறையாகக் கற்று தமிழ்ப் பண்டிதர் ஆகுகின்றார். அத்துடன் ஆசிரிய பயிற்சியையும் பெற்று நல்லா சிரியராகவும் மிளிர்கிறார்.

இலங்கையின் பல பகுதிகளில் கற்பித்து யாவரையும் நன்கு அறிந்தும் கொள்ளுகின் றார். கற்பிக்கும் வேளை கருத்தூன்றிக் கற்பித்து கற்கின்றவர்கள் மனத்தில் நற்கருத்துக்களையும் ஊன் றுகின்றார். வேலைபார்த்த இடமெல்லாம் வேலையெனக் கருதா மல் அதனை ஆத்மார்த்தப் பணியாக அகமிருத்தி மேற் கொள்ளு கின்றார். ஆசிரியப் பணியை அகமிருக்கும் அழுக்குகளை அகற் றிடும் பணியாகவே எண்ணிச் செயற்படு கின்றார். இதனால் அன் னையாய் , அறிவூட்டும் ஆசானாய் மதிக்கவும்படுகிறார் என்பதை மனமிருத்துவது அவசியமாகும்.

அழகானவர் தங்கம்மா அவர்கள். அறிவானவர் தங்கம்மா அவர்கள். இளமையில் அவரைப் பார்த்தவர்கள் அவர் வசம் ஈர்க்கவே படுவார்கள். சாதாரண பெண்தானே அவரும். ஆனால் அவர் மன த்தில் லௌகீகம் பற்றிய சிந்தனைக்கே இடம் இல்லா மல் போய் விடுகிறது. அவர் சிந்தனை எல்லாம் - சைவம் பற்றியும் , சன்மார்க்கம் பற்றியும் , சமூகம் பற்றியுமே சென்று விடுகிறது. இல்லறத் தில் தங்கம்மா அவர்கள் இணைந்திருந்தால் - சாதாரண ஒரு குடும்பத் தலைவியாய் , பிள்ளைச் செல்வங் ளுடன் வாழும் நிலைதான் ஏற்பட்டிருக்கும். ஆனால் அவரிடம் எழுந்த அரிய சிந் தனையால் - அனைவருக்கும் அன்னையாய் , அநேக குழந் தைகளின் வழிகாட்டியாய் ,சமுதாயத்தின் சேவகியாய் , சைவ த்தின் காவலராய் ,தமிழ் பெரும் ஆளுமையாய் , யவரும் விய ந்து பார்த்து வாழும் வாய்ப்பு வாய்த்தது என்பதை எவருமே மறுத்து ரைத்து விடல் முடியாது.

தெல்லிப்பளையில் பிறந்தவர்தான் தங்கம்மா அவர்கள். அவ ரின் முன்வினைப் பய னாகவேதான் சாதாரண சிறிய கோவிலான துர்க்கை அம்மன் கோவில் தென்படு கிறது.அந்தத் துர்க்கை அம்மாதான் எங்கள் தமிழ்ச் செல்வி தங்கம்மாவின் வாழ்வி னையே மாற்றப் போகிறது என்பதை எவருமே எதிர்பார்க்கவே இல்லை. ஏன் .. தங் கம்மா அவர்களே எதிர்பார்த்திருக்கவும் மாட்டார். இதைத்தான் திருவருள் என்று எண்ணத் தோன்றுகிறது. தெல்லி ப்பளையில் பிறந்தவரின் சமய , சமூக , ஆன்மீக , அறப்பணிகள் தமிழ்ப்பணிகள் , அத்தனையும் ஆரம்பிக்கும் இடமாக அன்னை துர்க் கையின் ஆலயமே நிலைக்களனாக அமைகிறது ,அமைந்தது

என்பதை அனைவரும் அகமிருத்துவது மிக மிக அவசியமாகும். சாதாரண தமிழ்ப்பண் டிதர் ,சைவப்புலவர் , பயிற்றப்பட்ட ஆசிரி யர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர் கள் " துர்க்கா துரந்தரி " என்று போற்றப்படுவதற்கும் நிலைக்களனே தெல்லிப்பளை யில் சாதாரணமாய் இருந்த துர்க்கை அம்பாளின் சிறிய கோவிலே ஆகும். தங்கம்மா அவர்கள் துர்க்கை அம்பாள் கோவிலைக் கண் டதுதான் அவரின் வாழ்வில் மிகப் பெரிய தருணம் , மிகப்பெரிய திருப்பு முனை என்று எண்ண முடிகிறதல்லவா !

நாவலரை நன்றாகவே மனத்தில் பதித்திருக்கிறார் தங்கம்மா அவர்கள். அதனால் அவரின் தடம் பற்றி நடக்க முற்படுகின்றார். நாவலர் பெருமானின் பின்னர் - புரா ணங்கள் , திருமுறைகள் , சைவசமயச் சிந்தனைகளைக் கோவில்களில் யாவரும் கேட்டிடப் பிரசங்கம் செய்யும் பாங்கு இல்லாமல் போய்விட்டது என்று தான் சொல்ல வேண்டும். அத்தகைய சூழலில் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் அந்தப் பணியை ஆத்மார்த்தமாய் அகமி ருத்தி ஆலயங்கள் தோறும் இடைவிடாமல் பிரசங்களை அழகு தமிழால் தக்க எடுத்துக் காட்டுக்களுடன் மிகவும் பக்குவமாய் செய்தமை மீண்டும் நாவலர் யுகம் தோன்றி விட்டதோ என்றே எண்ணிட வைத்தது. தங்கம்மா அவர்களின் சைவப் பிரசங்கங் கள் இலங்கையில் எல்லாக் கோவில்களிலும் இடை விடாது இடம் பெற்றன. இலங்கை மட்டும் அல்லாது - இந்தியா , மலேசியா , சிங் கப்பூர் , இங்கிலாந்து நாடுகளிலும் அவரின் பிரசங்கங் கள் இடம் பெற்றன என்பதை மனமிருத்துவது அவசியமாகும்.

பேச்சுடன் நின்று விடாமல் எழுத்திலும் தன்னுடைய ஆளுமை யினைப் பதித்தும் நின்றார். " கந்த புராணச் சொற்பொழிவுகள் " நூல் மிகவும் கருத்தாளம் மிக்க நூல். இந்த நூலின் பெறுமதியை வியந்து பாராட்டி இலங்கை அரசாங்கம் 1978 ஆம் ஆண்டு " சாகி த்திய மண்டல விருதினை " வழங்கியது.

தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சைவசமயத் தொண்டினையும் சொற்பெருக்கா ற்றும் ஆற்றலையும் வியந்து மதுரை ஆதீனத் தால் " செஞ்சொற் செம்மணி " பட்டம் வழங்கப்பட்டது. காரைந கர் மணிவாசக சபையினால் " சிவத்தமிழ் செல்வி ", தமிழ் நாடு இராமேசுரி பீடாதிபதியினால் " சைவதரிசினி " ,சிலாங்கூர் மலேசியா இலங் கைச் சைவச் சங்கத்தினால் "திருவாசகக் கொண்டல்" , வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தினால் " திருமுறைச் செல்வி " , ஈழத்துச் சிவனடியார் கூட்டத்தால் ' சிவமயச் செல்வி" அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் " சிவஞான வித்தகர் " , " தெய்வத் திருமகள் " ஆகிய இரண்டு விருதுகள் , துர்க்காதேவி தேவஸ்தானத்தால் " துர்க்கா துரந்தரி " , மாதகல் நுணசை முரு கமூர்த்தி தேவஸ்தானத்தினால் " செஞ்சொற் கொண்டல் " , இணு வில் பரராசசேகரப் பிள்ளையார் தேவஸ்தானத் தினால் " திரு மொழி அரசி " கொழும்புக் கம்பன் கழத்தால் " கம்பன் புகழ் விருது " , என எங்கள் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை நாடிப் பட்டங்கள் வந்து குவிந்தன. அம்மா அவர் களுக்கு பட்டங்களை வழங்கிய அமைப்புகள் அத்த னையும் - பட்டங்களை வழங்கியதால் பெரும் பேற்றினைப் பெற்றதாகவே எண்ணிக் கொண்டன என்றுதான் சொல்ல வேண்டும். தமிழ்ச் செல்வி தங்கம்மா அவர்களுக்குப் பல பட்டங்கள் வந்து அமை ந்தாலும் காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தால் வழங்க ப்பட்ட " சிவ தமிழ் செல்வி " என்னும் பட்டந்தான் மிகவும் சிறப்பானதாய் ஒளி விட்டு விளங்கியது எனலாம். தங்கம்மா என்றால்

" சிவத்தமிழ் செல்வி " என்றே அனைவர் அகத்திலும் பதிந்து விட்டது என்பதை எவ ருமே மறுத்துரைக்க மாட்டார்கள். சிவ மயமாய் சிந்தித்து , சைவத்தைக் காத்திடும் அன்னையாய் , காலத்தின் வருகையாய் , ஏன் காலத்தின் காவலராய் , விளங்கினார் என்பதுதான் உண்மையாகும்.

அம்மா அவர்கள் தன்காலத்தில் சைவத்தின் குரலாகவே ஓங்கி ஒலித்தார். சைவத் தின் வளர்ச்சியை இளையவர் விளங்கிடவும் , சைவ நம்பிக்கை தளர்ந்தவர் நிமிர்ந் திடவும் , துணிவாய் அதே வேளை மிகவும் பக்குவமாய் யாவரும் பக்குவத்தைப் பெறும் வண்ணம் பல வற்றை ஆற்றினார். பலருக்கும் நல் வழிகாட்டியாகவும் விளங்கினார்.

ஆன்மீகம் என்பது ஆலய வழிபாட்டுடன் மட்டும் நின்று விடுவதில்லை. ஆன்மீகம் என்பது அறம் சார்ந்ததாகும் என்று அம்மா அவ ர்கள் வாழ்ந்து காட்டினார்கள். புரா ணங்கள் படிப்பதும் ,திருமுறை களைப் போற்றுவதும் ,திருக்கோவில்களை வழி படுவதும் , நற் சிந்தனைகளைக் கேட்பதும் , அத்தியாவசியம் என்று அம்மா அவர்கள் கூறினார்கள்.

அதே வேளை ஆதரவற்றோரைக் காப்பதும் , பசிப்பிணி போக்குவதும் , கல்விக்கண்ணைத் திறப்பதும் , நலத்தினைக்காக்க வழி வகுப்பதும் அவசியமானது என்பதையும் எங்கள் தங்கம்மா அவர்கள் எடுத்து உரைத் தார். உரைத்தோடு நின்று விடாமல் - தானே முன் வந்து " துர்க்காபுரம் மகளிர் இல் லம் " என்னும் அமைப்பினை நிறுவினார். " அன்னபூரணி அன்னதான மண்டபத்தை " அமைத்தார். அத்துடன் அமையாது " கல்யாண மண்டம் " ஒன்றையும் அமைத் தார்கள். குறைந்த செலவில் கல் யாணங்களை நடத்துவதற்கு அதாவது வசதிகள் குறைந்தோரும் இல்லறமாம் நல்லறத்தில் இணைந்து இன்புற - அம்மாவின் இம்முயற்சி பெரும்பயனை அளித்தது எனலாம். இவை அத்தனையும் ஆன்மீகமே என்பதை நாமனைவரும் மனமிருத்துவது



மிக மிக அவசியமாகும்.

எங்கள் தமிழ்ச் செல்வி யாழ் மண்ணின் மாசில்லா மங்கை ,சைவத்தின் காவலர் , சன்மார்க்க வழிகாட்டி ,செந்தமிழ்ப் புலவர் சிறப்புடை ஆசானுக்கு - அமெரிக்க ஹவாய் சிவாயசுப்பிரமணிய சுவாமி ஆசிரிமம் 2005 ஆம் ஆண்டுக்கான " சிறந்த இந்துப் பணி " விருதும், . 2003 இல் வவுனியாவில் இடம் பெற்ற தமிழ் இலக்கி யப் பெருவிழாவில் " வட கிழக்கு மாகாண ஆளுனர் விருதும் " வழங்கப்பட்டது. அது மட்டுமல்லாது இலங்கை அரசாங்கத்தால் " கலாசூரி " விருதும் வழங்கப்பட்டது. அம்மா அவர்களின் அனை த்துப் பணிகளையும் கருத்தில் கொண்டு கல்வி நிலையில் , கற் பித்தல் நிலையில் உயர்ந்தோங்கி நிற்பது என்று எல்லோர் மனத் திலும் இடம் பெற்றிருக்கின்ற பல்கலைக்கழகமானது அதாவது யாழ் மண்ணில் பொன்னம்பலம் இராமநாதப் பெரியோனின் கன வாய் இருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாய் பேருருப் பெற்ற பல்கலைகழகம் எங்கள் சிவத்தமிழ்ச் செல்விக்கு " கலாநிதிப் பட்ட த்தினை " வழங்கி கௌரவப்படுத்தியது. இந்தப் பட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலை க்கழகம் வழங்கியதால் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகமே பெரும் பேற்றினைப் பெற் றுக் கொண்டது எனலாம்.

சைவத்தின் காவலராய் , தமிழ் மொழியின் ஆளு மையாய் , எங்கள் நாவலர் பெரு மான் திகழ்ந்தார். அவரின் தடம்பற்றி நடந்த தமிழ்ச் செல்வி தங்கம்மா அவர்களும் - சைவத்தையும் தமிழை யும் கண்ணாகவே கருதினார். நாவலர் பெருமான் சமயப்பணி யோடு சமூகப்பணி யினையும் மேற்கொண்டார். அம்மாவும் அவ்வழியில் பயணப்பட் டார் என்பதும் கருத்திருத்த வேண்டியதேயா கும்.

நாவலர் பெருமானைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறோம். அவர் நடந்த மண்ணில் நடந்தும் இருக்கிறோம். அவரின் ஆற்றல்களை அவரின் வரலாற்றால் அறிந்தும் இருக் கிறோம். அவர் இம்மண் ணில் வாழ்ந்த காலத்தில் நாம் பிறக்கும் பாக்கியம் எமக் கெல்லாம் வாய்க்கவில்லை. ஆனால் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் காலத்தில் நாமெல்லோரும் வாழ்ந்தோம் , அவருடன் பழகினோம் ,அவரின் சொற்பொழி வுகளைக் கேட் டோம் , அவரின் ஆன்மீகப் பணிகளை அறப்பணிகளை , கண் டோம் வியந்தோம் என்பதே பெரும் பேறு என்றுதான் எண்ண வேண்டும்.

சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர் களுக்குப் பின் அவரை ப்போல் ஒரு ஆன்மீக ,அறச்சிந்தனை மிக்க அருள் நிறைப் பெண்மணி யாழ்மண்ணுக்கு வாய்க் கவே இல்லை என்பதை எவருமே மறுத்து உரைத்திடல் முடியாது.

சைவத்தின் வழிநடந்த தமிழ்ச் செல்வி தங்கம்மா அவர்கள் ஆண்டவன் அருள் பெற்ற அருளாளர். சைவத் தமிழ் வரலா ற்றில் சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி என்னும் பெயர் பொன் னெழுத்துக்களால் பொறிக்க ப்படுவது மிக மிக அவசியமான தாகும்.

காலைக்கதிர் Kalaikkathir

# தேர்தல்களைப் பிற்போட்டால் மக்கள் கொந்தளிப்பார்கள்

## இரா.சாணக்கியன் எச்சரிக்கை

மின்சாரக் கட்டணம், எரிபொருள்களின் விலை என்பன குறைபக்கப்பட்டாலும் கூட, மக்கள் வாழ முடியாத அளவிற்கு விலைவாசிகள் அதிகரித்திருக்கின்றன. இந்த நிலையில் தேர்தல்களைப் பிற்போட்டால் மக்கள் கொந்தளிப்பார்கள் என்பதை ஜனாதிபதி அறிந்து வைத்திருக்க வேண்டும். என நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுதல், பொதுசன வாக்கெடுப்பை நடாத்துதல், போன்ற கருத்துக்கள் அரசியல் களத்தில் தற்போது பேசுபொருளாக உள்ளன. இவ்விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனிடம் மட்டக்களப்பு களுதாவளையில் வைத்து ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையின் அரசியல் அமைப்புக்கு அமைவாக ஒருவருட காலத்திற்கு ஜனாதிபதியின் பதவிக்காலத்தை நீடிப்பதற்கு நாடாளுமன்றத்திலே மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றால் அதற்குரிய சூழ்நிலை இருக்கின்றது. நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தையும் இன்னும் ஒரு வருடத்தால் நீடிப்பதற்றாக மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கினால் ஜனாதிபதி முதன் முறையாக நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகியவர்கள், நாடாளுமன்றத்தையே இனிமேலும் கனவாக வைத்திருக்கும் பின்வரிசை, முன்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே ஜனாதிபதி பேச்சு ஒன்று நடந்தினார் என்ற வதந்தி ஒன்றை நாமும் கேள்விப்பட்டிருந்தோம்.

அரசமைப்பின் பிரகாரம் நாடாளுமன்றத்தினதும், ஜனாதிபதியினதும் பதவிக் காலத்தை மேலும் ஒரு வருடத்தால் நீடிப்பது தொடர்பாகத்தான் அதில் பேசப்பட்டதாக எமக்கும் சொல்லப்பட்டது.

இலங்கையில் முக்கியமான சட்டமூலங்கள் நாடாளுமன்றத்திலே கொண்டுவரப்பட்டபோது, அதனை நாடாளுமன்றத்திலே வாக்கெடுப்பக்கு விட்டபோது அரசாங்கத்திற்குச் சார்பாக 125 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு கிடைத்திருந்தது. அதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களை விலை கொடுத்து வாங்குவதென்பது அனைவரும் அறிந்த விடயம். 20 ஆவது திருத்தச்சட்டம் அமுல்படுத்தப்போகும்போது எதிர்க்கட்சியிலிருந்து ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்களை விலை கொடுத்து வாங்கியதாகவும் பலரால் பேசப்படும் விடயம். இந்நிலையில் ஜனாதிபதி தனக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையில் இருக்கின்றாரா என்ற சந்தேகம் இருக்கின்றது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டு பிற்போடப்பட்டுள்ளது, மாகாணசபைத் தேர்தல் 2017 ஆம் ஆண்டிலிருந்து நடத்தப்படவில்லை. நாட்டில் ஜனநாயகம் என்ற ரீதியில் ஜனநாயகத்திற்கு மாறாக தேர்தல்கள் பிற்போடப்பட்டுக் கொண்டே வருகின்றன. இந்நிலையில் எதிர்வருகின்ற தேர்தல்களும் பிற்போடப்பட்டால் மக்கள் ஜனநாயக ரீதியில் தமது எதிர்ப்பை பதிவு செய்ய முடியாமல் போனால், ஜனநாயக்திற்கு மாறான வழியில் தமது எதிர்ப்பை பதிவு செய்வதற்கு மக்கள் தள்ளப்படுவார்கள்.

தற்போது நாட்டிலே பொருளாதார நிலமைக்கு மத்தியில் மக்கள் பொறுமையாக இருப்பதற்குரிய காரணம், மிகவிரைவாக ஜனாதிபதித் தேர்தல் வரும் அதிலே ஆட்சிமாற்றம் உருவாகும் அதன் பின்னர் பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட்டு மக்களுடைய வாழ்வாதாரம் மேம்படும் என்ற நம்பிக்கையில் - புதிய அரசாங்கம் உருவாகும் என்ற நம்பிகையில் - அமையதியாக இருக்கின்றார்கள்.

ஆனால் தற்போது கண்துடைப்பாக மின்சார கட்டணம், எரிபொருள்களின் விலை என்பன குறைக்கப்பட்டாலும் கூட, மக்கள் வாழ முடியாத அளவிற்கு விலைவாசிகள் அதிகரித்திருக்கின்றன. இந்த நிலையில தேர்தல்களைப் பிற்போட்டால் மக்கள் கொந்தளிப்பார்கள் என்பதை ஜனாதிபதி புரிந்து வைத்திருக்க வேண்டும். என அவர் இதன்போது தெரிவித்தார். (05)



# கண்டனம்

யாழ்ப்பாணம் அச்சுவேலி பகுதியில் ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனின் வீட்டின் மீது வியாழக்கிழமை அதிகாலை மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் என்பது அவரது ஊடகப்பணியை அச்சுறுத்தலுக்குள்ளாக்கி அவரை அடிபணிய வைக்கும் நடவடிக்கையே எனத் தெரிவித்துள்ள கிளிநொச்சி ஊடக அமையம் இந்தத் தாக்குதல் முயற்சிக்கு தனது வன்மையான கண்டனங்களையும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கிளிநொச்சி ஊடக அமையும் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

இலங்கையை பொறுத்தவரை ஊடவியலாளர்கள் தங்களது கடமைகளின் போரிட்டு அதிகளவு சவால்களையும், நெருக்கடிகளையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக தமிழ் ஊடகவியலாளர்கள் எதிர்கொள்கின்ற நெருக்கடிகள் என்பது மிக மோசமானதாக காணப்படுகிறது. ஆனாலும் அவர்கள் இவற்றையெல்லாம் கடந்து தங்களது கடமைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். ஊடகத் தொழில் என்பது முக்கியமாக பிராந்திய செய்தியாளர்களின் பொருளாதார நிலைமை என்பது கவலைக்குரியது. அவர்களுக்கு ஊடகத் தொழில் மூலம் கிடைக்கின்ற பொருளாதார நன்மை சொற்பமானதே. இந்த நிலையில் அவர்கள் மீது தாக்குதல் மேற கொண்டு அவர்களது சொத்துக்களுக்கு அழிவை ஏற்படுத்தி அச்சுறுத்தும் செயற்பாடுகள் மன்னிக்க முடியாத நடவடிக்கைகள் ஆகும்.

இவ்வாறான நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படல் வேண்டும் எனத் தெரிவித்துள்ள கிளிநொச்சி ஊடக அமையம், இத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் மீது மேற்கொள்ளப்படும் சட்டநடவடிக்கை என்பது இனிவரும் காலங்களில் இவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெறாதிருப்பதை உறுதி செய்வதோடு, ஊடகவியலாளர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதாக அமைய வேண்டும் என அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (05)

# வன்முறை குழு அட்டகாசம் நகை மற்றும் பணம் திருட்டு

## வட்டுக்கோட்டையில் சம்பவம்

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குப்பட்ட வட்டுக்கோட்டை பகுதியில் வியாழக்கிழமை மதியம் வன்முறை குழு ஒன்று அட்டகாசத்தில் ஈடுபட்டதுடன் வீட்டிலிருந்த நகை மற்றும் பணம் என்பவற்றையும் திருடிச் சென்றதாகக் கூறப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

குறித்த வீட்டில் உள்ளவர்கள் வெளியே சென்றிருந்த நிலையில் வியாழன் மதியம் குறித்த வீட்டுக்குச் சென்ற வன்முறை குழுவினர் வீட்டிலிருந்த தையல் இயந்திரம் குளிர்சாதனப் பெட்டி, ஜன்னல் கண்ணாடிகள், வீட்டுக் கதவு, ஒலிபெருக்கி சாதனங்கள் தொலைக்காட்சி உள்ளிட்ட பல பொருள்களை அடித்துடைத்து சேதமாக்கியதுடன், வீட்டிலிருந்த இரண்டு லட்சத்துப் பதினோராயிரம் ரூபா பணம், மூன்று பவுன் சங்கிலி மற்றும் இரண்டு பவுன் காப்பு என்பவற்றைத் திருடிச் சென்றதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்த நிலையில், அயல் வீட்டிலிருந்த சிசிடிவி காட்சிகளை பொலிஸார் பார்வையிட்டுக்கொண்டு இருந்தவேளை, தாக்குதலை மேற்கொண்ட ஒருவர் மன்னிப்பு கேட்பதற்காக வந்தவேளை பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

அவரை விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் ஏனையோரையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05)

# மாவடிப்பள்ளி கலாசார மண்டப நிர்மான வேலைகள் ஆரம்பம்

## முஷாரப் எம்.யால்

(எம்.என்.எம்.அப்ராஸ்)

மாவடிப்பள்ளி கலாசார மண்டப நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மாவடிப்பள்ளி பெரிய பள்ளிவாசலின் வேண்டுகோளுக்கிணங்க, திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கல்முனை மற்றும் காரைதீவு உள்ளிட்ட பிரதேசங்களின் அபிவிருத்திக் குழுக்களின் தலைவருமான சட்டத்தரணி எஸ்.எம். எம்.முஷாரப்பின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து மாவடிப்பள்ளி கலாசார மண்டப நிர்மாணத்துக்கு ஐந்து மில்லியன் ரூபாக்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற்படி கட்டட வேலைக்கான ஆரம்ப நிகழ்வு நேற்று (வெள்ளிக்கிழமை)இடம்பெற்றது.

இதன் போது பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கலாச்சார மண்டப நிர்மாண வேலைத் திட்டதினை ஆரம்பித்து வைத்தார். பள்ளிவாசல் தலைவர் முனாப்,செயலாளர் பௌமி,மௌலவி பாரிஸ்,பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர் அஷாம் அப்துல் அஸீஸ்,காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் ஏ.எம்.ஜாஹிர், நாடாளுமன்ற உறுப்பினரின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் வை.எல். எம். நியாஸ்,மாவடிப்பள்ளி விளையாட்டு கழகங்களின் உறுப்பினர்கள்,ஊர் முக்கியஸ்தகர்கள் பொது மக்கள்,நலன் விரும்பிகள் என பலரும் இதன் போது கலந்து கொண்டனர். (05)





காலைக்கதிர் Kalaikkathir

# ஊடகவியலாளர் வீடு மீதான தாக்குதல் பின்னணியில் அரச புலனாய்வாளர்கள்

## சந்தேகம் வெளியிடுகின்றார் செல்வராஜா கஜேந்திரன்

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளரின் வீட்டின் மீதான தாக்குதலின் பின்னணியில் அரச புலனாய்வுப் பிரிவு இருப்பதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் சந்தேகம் வெளியிட்டார்.

யாழ்ப்பாணம் - அச்சுவேலியில் உள்ள ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனின் வீட்டின் மீது இனந்தெரியாத நபர்கள் புகுந்து வன்முறையில் ஈடுபட்டனர். குறித்த தகவலறிந்து வியாழக்கிழமை அங்கு சென்று பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்த சம்பவத்தை நாம் வன்மையாக கண்டிக்கிறோம். தாக்குதலுக்கு பின்னர் துண்டுப்பிரசுரம் போடப்பட்டிருக்கின்றது. எங்களைப் பொறுத்தவரையில் குறித்த தாக்குதலை நடத்தியவர்களின் பின்னணியை மூடி மறைப்பதற்காக குறித்த துண்டுப்பிரசுரங்கள் போடப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கிறோம். திருநங்கை சார்ந்த தரப்புக்களால் குறித்த தாக்குதல் நடத்தப்பட்டிருக்க வாய்ப்பில்லை.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஜனாதிபதி யாழ்ப்பாணம் வருகைதந்தபோது ஊடகவியலாளர் பிரதீபனுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. ஜனாதிபதியின் நிகழ்வுகளில் அவரை அனுமதிக்க வேண்டாம் என பாதுகாப்பு தரப்புக்களால் அறிவிக்கப்பட்டதாக சொல்லி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்ற நிகழ்வுகளில் செய்தி சேகரிக்க அனுமதி மறுக்கப்பட்டது.

இது தொடர்பில் சர்வதேச தூதரகங்கள், சர்வதேச ஊடக அமைப்புக்களுக்கு அவரால் முறைப்பாடு அனுப்பப்பட்டது.

2009இல் புனர்வாழ்வுக்கு பின்னர் பிரதீபன் ஊடகத்துறைக்குள் பிரவேசித்து 15 ஆண்டுகளாகின்றன. தென்னிலங்கையில் வருகைதருபவர்களின் எத்தனையோ நிகழ்வுகளுக்கு செய்தி சேகரிக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.



ஆனால் ஜனாதிபதியின் நிகழ்வுக்கு அனுமதிக்காதமை வேண்டுமென்றே தம்மை அவமானப்படுத்த மேற்கொள்ளப்பட்டதாகவும், தனது தொழிலை சுதந்திரமாக செய்யமுடியாது நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருப்பதாகவும் அவரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இது தொடர்பில் ஒரு சில ஊடகங்களிலும் செய்தி வந்திருக்கிறது. அவ்வாறு அனுமதிக்கப்படவில்லை என்பது தொடர்பில் வெளிவந்த செய்திகளின் அடிப்படையில் பிரதீபனிடம் உளவுத்துறை விசாரணைகளை மேற்கொண்டிருக்கின்றது.

இவ்வாறானநிலையில் குறித்த சம்பவம் தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டமைக்கு அச்சுறுத்தல் விடுக்கும்முகமாகவே குறித்த தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என சந்தேகம் எழுந்துள்ளது. அரச புலனாய்வுப் பிரிவினருக்கு தெரியாமல் குறித்த தாக்குதல் நடத்தப்பட்டிருக்க வாய்ப்பில்லை. இதற்கு முழுப் பொறுப்பையும் அரச புலனாய்வுப் பிரிவினர் ஏற்கவேண்டும். முன்னாள் போராளிகள் 15 ஆண்டுகளுக்கு பின்னரும் சுதந்திரமாக செயற்பட முடியாத சூழலையே இது காட்டுகின்றது. - என்றார். (05)

# திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் வவுனியா பொலிஸால் மூவர் கைது

## பல லட்சம் ரூபாய் பெறுமதியான நகைகளும் மீட்பு

வடக்கின் மூன்று மாவட்டங்களில் உள்ள 6 இடங்களில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் 3 பேர் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடம் இருந்து பல லட்சம் ரூபா பெறுமதியான நகைகளும் மீட்கப்பட்டுள்ளன என பொலிஸார் நேற்று (வெள்ளிக்கிழமை) தெரிவித்தனர்.

வவுனியா, குருமன்காடு பகுதியில் உள்ள வீடு ஒன்றை உடைத்து 5 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளும், தொலைபேசி ஒன்றும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் திருடப்பட்டிருந்தன. இது தொடர்பாக வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவில் பாதிக்கப்பட்டவரால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயக்கொடியின் வழிகாட்டலில் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏம்மந்த தலைமையில் பொலிஸ் சார்ஜன்ட்டுகளான திசாநாயக்கா, திலீபன், பொலிஸ் கொன்தாபிள்களான உபாலி, தயாளன், ரணில் உள்ளடங்கிய பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். இதன்போது இச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்திற்கு இடமான மூவர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் வடக்கின் மூன்று மாவட்டங்களில் 6 இடங்களில் திருட்டில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளதுடன், பல லட்சம் ரூபா பெறுமதியான நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

வவுனியா, புளியங்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து 10 லட்சம் ஷரூபா பெறுமதியான நகைகளும், புளியங்குளத்தில் பிறிதொரு வீடு உடைத்து கிரேண்டர், லெப்டொப், லைற் உள்ளிட்ட பொருள்களும் குறித்த சந்தேக நபர்களால் திருடப்பட்டுள்ளன.

மேலும், மன்னார் பகுதியில் வீடு உடைத்து 5 லட்சம் ஷரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளதுடன், மன்னார், பேசாலைப் பகுதியில் 3 வயது பிள்ளை அணிந்திருந்த ஒரு லட்சத்து 75 ஆயிரம் ஷரூபா பெறுமதியான சங்கிலியும் அறுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தின் சாவகச்சேரி பகுதியில் மோட்டர் சைக்கிள் ஒன்றும் குறித்த நபர்களால் திருடப்பட்டுள்ளது. திருடப்பட்ட நகைகள் வவுனியாவில் உள்ள தனியார் நிறுவனங்களில் அடைவு வைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளதுடன், ஏனைய திருடப்பட்ட பொருள்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த 6 திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் வவுனியா, மகாறம்பைக்குளம் பகுதியியைச் சேர்ந்த 42 வயது நபர் ஒருவரும், வவுனியா, கூமாங்குளம் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய நபர் ஒருவரும், யாழ்ப்பாணம், புத்தூர் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய நபர் ஒருவருமாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும், மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் பொலிசார் மேலும் தெரிவித்தனர். (05 - 100)

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பதில் நிர்வாகி நியமனத்தில் குழப்பம்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு வைத்திய அத்தியட்சகர் நியமனத்தில் திரிசங்கு நிலையில் குழம்பிப்போய் உள்ளதாக வடமாகாண சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த விடயம் தொடர்பாகத் தெரியவருவதாவது -

சுகாதாரத் துறையில் வெற்றிடமாக உள்ள நிறுவனங்களுக்கு அவற்றின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அண்மையில் மாகாண அதிகாரிகளின் பங்குபற்றலுடன் மத்திய சுகாதாரத் திணைக்களமும் இணைந்து நேர்முகத் தேர்வுகளை பொதுச் சேவை ஆணைக்குழு நடத்தி சிரேஷ்ட தரத்திற்குத் தகுதிபெற்றவர்களை வெற்றிடமாகவுள்ள மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்களாகவும், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களாகவும் மாவட்ட வைத்தியசாலைகளுக்குப் பணிப்பாளர்களாகவும் நியமனங்களை வழங்கியிருந்தது. இது தேசிய ரீதியில் வழங்கப்படும் நியமனம் என்பதால் பல பெரும்பான்மையினத்தவர்கள் வடக்குக்கு நியமிக்கப்பட்டார்கள்.

அதன்பின் கனிஷ்ட தரத்துக்குரிய நேர்முகத் தேர்வும் நடத்தப்பட்டு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டன. சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு வைத்திய அத்தியட்சகராக வைத்திய நிபுணர் கற்கை (நிர்வாகம்) நிறைவுசெய்த வைத்தியர் காண்டீபன் நிரந்தர நியமனம் பெற்று சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ளார். அங்கு ஏற்கனவே இருந்த வைத்தியர் குமாரவேல் நிரந்தர நியமனம் பெற்று ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்குள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் நிரந்தர வைத்திய அத்தியட்சகராக நியமிக்கப்பட்ட வைத்திய கலாநிதி காண்டீபன் சர்வதேசப் பயிற்சிக்காக செல்லவுள்ளார். அதனால், பதில் வைத்திய அத்தியட்சகராக விஞ்ஞான முதுமாணி கற்கையைப் பூர்த்திசெய்த வைத்தியர் திஷானி என்பவரை வடக்கு மாகாண சுகாதார அமைச்சு நியமனக் கடிதம் வழங்கி நியமிக்க, மத்திய சுகாதார அமைச்சு மாகாண சுகாதார அமைச்சினுடைய எந்த ஒப்புதலையும் பொறாது, முதுவிஞ்ஞான மாணி பரீட்சை எழுதிவிட்டு பெறுபேற்றுக்காகக் காத்திருக்கின்ற வைத்தியர் அர்ச்சுனா என்பவருக்கு பதில் வைத்திய அத்தியட்சகராக நியமனக் கடிதம் வழங்கியுள்ளது. இதனால், நிரந்தர நியமனம் பெற்ற வைத்திய அத்தியட்சகர் சர்வதேச பயிற்சிக்குச் செல்லும்போது முது விஞ்ஞானமாணி பட்டம் பெற்று ஓரளவு தகுதியுடைய - மாகாணத்தால் நியமிக்கப்பட்ட வைத்தியர் நிஷானி பதில் கடமையாற்றுவதா அல்லது முது விஞ்ஞான மாணி கற்கையை முடிவுறுத்தாத - சாதாரண வைத்திய உத்தியோகத்தரான - அந்தப் பதவிக்குத் தகுதியற்ற - மத்திய சுகாதார அமைச்சால் மாகாணத்தின் ஒப்புதல் இன்றி நியமனம் வழங்கப்பட்ட - வைத்தியர் அர்ச்சுனா பதில் கடமையாற்றுவதா? என்ற திரிசங்கு நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை.

இது தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் மத்தியுடன் தொடர்புகொண்டு விரைந்து இந்தப் பிரச்சினைக்கு சரியான தீர்வை வழங்கவேண்டும் என்று சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.(05)

# வவுனியா பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் கவனவீர்ப்புப் போராட்டம்



வவுனியா பல்கலைக்கழகத்தின் கல்வி சாரா ஊழியர்கள் நேற்று (வெள்ளிக்கிழமை) பம்பைமடுவில் உள்ள பல்கலைக்கழகத்திற்கு முன்பாக கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு இருந்தனர். நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் தமது சம்பள முரண்பாட்டை அரசாங்கம் தீர்க்க வேண்டும் என வலியுறுத்தி பணி பகிஸ்கரிப்பில் ஈடுபட்டு வரும் நிலையில் குறித்த கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றிலும் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது பல்கலைக்கழக ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை தீர்த்துவை, தமக்கு வழங்குவதாக உறுதிப்படுத்திய கொடுப்பனவை வழங்கு, 25 வீத அதிகரிப்பை உடனடியாக வழங்கு போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் தாங்கி இருந்தனர்.

சுமார் அரை மணி நேரம் இடம்பெற்ற இந்த கவவீர்ப்புப் போராட்டத்தை அடுத்து கல்வி சாரா ஊழியர்கள் தங்களுக்கு இடையிலான கூட்டம் ஒன்றையும் ஏற்பாடு செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05 - 100)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.06.2024இல் வெளியிடப்பெற்றது